மல்லிகை வாசகம்

3



...டார்டு பப்ளிஷர்ஸ்
சென்னை-1

மல்லிகை வாசகம்

மூன்றாம் புத்தகம்

(மூன்றாம் வகுப்புக்குரியது)

ஆசிரியர் :
வித்துவான் எஸ். முருகேச முதலியார்,
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை
உயர்நிலைப்பள்ளி, சென்னை.

ஸ்டாண்டர்டு பப்ளிஷர்ஸ்,
சென்னை-1

பதிப்புரிமை] 1963 [விலை 57 ந. பை.

முதற் பதிப்பு—பிப்ரவரி, 1958
எட்டாம் பதிப்பு—ஜூன், 1963

Approved by the Madras Text-Book Committe for Class Use-Vide page 5 of the Fort St. George Gazette dated 28-5-58.

This book is printed on white printing galzed paper (D/C-24 lbs.)

The Huxley Press, 114 Armenian St., Madras-1.

முன்னுரை

அண்மையில் அரசாங்கத்தார் (25-12-57 இல்) வெளியிட்ட (Revised Syllabus for Standards I to VII) புதிய பாடத் திட்டத்தின்படி, தாய்மொழியிலேயே எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டுமென்ற நற்கருத்தினையொட்டி, நல்ல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி இம் **மல்லிகை வாசகம்** ஒன்று முதல் மூன்று வகுப்பு வரை வெளி வருகின்றது. அவ்வரிசையில் இது **மூன்றும் புத்தகமாகும்.**

இளமையிலிருந்தே மாணவர்கள் தாய்மொழியில் பிழையற எழுதவும் படிக்கவும் போதுமான பயிற்சி பெறுவது இன்றியமையாததாகும். இளைஞருக்கு முன்னரே தெரிந்த பல பொருள்களோடு புதிய சில பொருள்களையும் சேர்த்து, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், இலக்கணப் பிழையின்றி, கற்பிப்பதே சிறந்த முறை என்பது உளநூல் வல்லாரின் கொள்கை. அக்கொள்கைப் படியே வெளிவந்துள்ள புதிய பாடத்திட்டந்தையொட்டி, இவ்வாசக வரிசையும் எழுதப்பட்டுள்ளது. தமிழ் அன்பர்களும், பள்ளித் தலைமையாசிரியர்களும். தமிழாசிரியர்களும் இவ்வாசக வரிசைக்குப் போதிய ஊக்கம் அளித்தருளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

ஆக்கியோன்.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	வாழை மரம்	3
2.	நால்வரும் கேட்டால் கொடும்	6
3.	என் வரலாறு	10
4.	தபால்	14
5.	பாரி வள்ளல்	16
6.	கிளி	20
7.	பசுவும் கன்றும் (பாட்டு)	23
8.	உழவு	25
9.	புகழேந்திப் புலவர்	29
10,	கொடுத்து வைத்தது கிடைக்கும்	32
11.	காகமும் நாகமும்	34
12.	கவிஞர் வீரராகவர்	36
13.	யானை	40
14.	நல்ல வழக்கங்கள்	42
15.	நட்பு ஆராய்தல்-I	43
16.	நட்பு ஆராய்தல்-II	45
17.	தொத்து நோய்	48
18.	பழமொழிகள்	51
19.	கொடி வணக்கம் (பாட்டு)	54
20.	இரவீந்திரநாத தாகூர்	55
21.	தமிழ் நாடு (பாட்டு)	59
22.	நோயற்ற வாழ்க்கை	61
23.	குரங்குக் கூட்டம் (பாட்டு)	64
24.	விழித்த பலன்	67
25.	எழுவாய்-பயனிலை-செயப்படுபொருள்	71
26.	குரங்காட்டி	75
27.	குமணன்—I. (நாடகம்)	78
28.	குமணன்—II. ,,	83
29	கடிதம்	86
	செய்யுட் பாடங்கள்	
	I. வெற்றி வேற்கை	88
	II. மூதுரை	90

தேசிய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தபசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ! ஜயஹே ! ஜயஹே !
ஜய ஜய ஜய ஜயஹே !

—கவிஞர் இரவீந்திரநாத தாகூர்.

தேசீய கீதம்

(பொருள்)

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கின்ற நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்;

நின் திருநாமம், பஞ்சாபையும், சிந்துவையும், குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும், திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.


அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது; இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு, வெற்றி! வெற்றி! வெற்றி!

1. வாழைமரம்

1. வாழைமரம் வெப்ப நாடுகளில் மட்டும் வளரும். இது பெரும்பாலும் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் இருக்கும்.



2. வாழைமரத்துக்கு விதை இல்லை. இந்த மரத்தின் அடியில் கிழங்கோடு கன்றுகள் இருக்கும். மக்கள் அவற்றை எடுத்து மண்ணில் வேறு இடத்தில் நடுவார்கள். நட்ட சில நாட்களுக்குப் பிறகு அந்தக் கன்றுகளில் புதிய குருத்து வெளிவரும். பின்பு அது இலையாய் விரியும். ஆறு மாதங்களில் வாழைக்கன்று ஒரு பெரிய மரமாகி விடும்.

3. வாழைமரம் குலைவிடுவதற்குமுன் ஒரு சிறிய இலை வெளிவரும். அதற்குக் கண்ணாடி இலை என்பது பெயர். பிறகு வாழைக்குலை வெளியே வரும். அந்தக் குலையின் நுனியில் பூவும், அதற்குமேலே காய்களும் இருக்கும். வாழைக் காய்கள் சீப்புச் சீப்பாய் இருக்கும். வாழைமரம் இரண்டாம் முறை குலைவிடாது.

4. நாம் வாழை இலையை உண்கல மாகப் பயன்படுத்துகிறோம். வாழையின் பூ, காய், தண்டு முதலியன கறி சமைக்க உத வும். வாழைப் பட்டையைச் சீவி, அதிலும் சிலர் உணவு உண்பர். வாழை நார் பூ கட்டப் பயன்படும். ஆகவே வாழைமரத்தில் பயன் படாத பாகமே இல்லை.

5. வாழையைப் பற்றிப் பல பழமொழி கள் உள்ளன. அவைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. வாழையடி வாழையாக
2. வாழைக்கு ஒரு குலை
3. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற் போல்,

புதிய சொற்கள்

கிராமங்களில்	பள்ளம்	விரியும்
ஒவ்வொரு	தோண்டி	இறுதியாக
விதை	பூமியில்	கண்ணுடி இலை
வேரில்	நடுவார்கள்	நுனியில்
கிழங்கு	குருத்து	உண்கலமாக
தண்டு	பட்டையை	பயன்படாத

பயிற்சி :

I. வாக்கியங்களில் அமை :

சீப்புச் சீப்பாய், விதை, வெப்பம்.

II. எதிர்ச் சொல் கூறு :

வெளி, தோன்றும், விரியும், பயன்படும்.

வினுக்கள் :

1. வாழை மரம் எங்கு வளரும் ?
2. வாழை மரத்திலிருந்து நமக்கு பயன்படும் பொருள்கள் எவை ?
3. "கண்ணுடி இலை" என்பது என்ன ?
4. வாழையைப் பற்றி இரண்டு பழமொழிகள் கூறு ?


இலக்கணம்

மரம், நாடு, கிராமம், தோட்டம், வீடு—இவை சொற்கள் என்று வழங்கப்படும். இச்சொற்கள் அவற்றின் பெயர்களைத் தெரிவிக்கின்றன அல்லவா ? ஆகையால் இவைகள் பெயர்ச் சொற்கள் என்று அழைக்கப் படும்.

இப்பாடத்திலிருந்து ஐந்து பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.

2. 'நால்வரும் கேட்டால் கொடும்'

1. நான்குபேர் கூடிக்கொண்டு ஒரு காட்டு வழியாக அயலூருக்குப் போயினர். வழியில் அவர்கள் ஒரு பண முடிப்பைக் கண்டு எடுத்தார்கள். அதிலுள்ள பணத்தைப் பங்கிடுவதைப் பற்றி ஒருவரோடு ஒருவர் வழக்கிட்டனர். நெடு நேரம் பேசியும் அவர்கள் வழக்குத் தீரவில்லை.



2. ஆகவே பண முடிப்பை அந்த ஊரிலுள்ள ஒரு செட்டியாரிடம் கொடுத்தனர். "நாங்கள் அருகிலுள்ள கிணற்றடிக்குப்போய்க் கட்டுச் சோற்றைச் சாப்பிட்டு விட்டு வருகிறோம். நாங்கள் நால்வரும் வந்து

கேட்டால் இதைக்கொடும்” என்று சொல்லி விட்டு நால்வரும் கிணற்றுக்குப் பக்கத்தில் உள்ள ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து உணவை உண்டனர். பிறகு, அவர்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு விரும்பினர் ; அதற்குத் தோண்டியும் கயிறும் செட்டியாரிடமிருந்து வாங்கிவரும்படி தம் முள் ஒருவனை அனுப்பினர்.

3. அவன் செட்டியாரிடம் சென்று தோண்டியும் கயிறும் கேட்காமல், பண முடிப்பை மற்ற மூவரும் கேட்டு வாங்கிவரச் சொன்னதாகக் கூறினான். அதைக் கேட்ட செட்டியார், “மற்றவர்களும் வராமல் நான் கொடுக்கமாட்டேன்” என்றார். வந்தவன் ‘சரி, நான் அவர்களைக்கொண்டு சொல்விக் கிறேன்’ என்று அவர்களை நோக்கி உரத் துக் கூப்பிட்டான். கிணற்றுக்கு அருகில் இருந்த அவர்கள், “கொடும், கொடும்” என்று கூறினார்கள். செட்டியாரும் பண முடிப்பைக் கொடுத்துவிட்டார். அவன் வாங்கிக் கொண்டு ஓடிப்போய்விட்டான்.

4. மூவரும் நெடுநேரம் காத்திருந்தனர். சென்றவனோ திரும்பிவரவில்லை. மற்ற மூவ ரும் செட்டியாரிடம் வந்து, ‘அவன் எங்கே?’

என்று கேட்டனர். "அவன் முன்னமே பண முடிப்பை வாங்கிக்கொண்டு போய்விட்டானே!" என்று செட்டியார் பதில் கூறினர். "ஓகோ! மோசம் பண்ணினீரே செட்டியாரே! நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் கொடும் என்றோமே! நீர் ஏன் ஒருவனிடம் மட்டும் கொடுத்தீர்? ஆகையால் எங்கள் முடிப்பை நீர் எங்களிடம் கொடுக்கவேண்டும்," என்று வழக்குப் பேசினர்கள்.

5. "நீங்கள் மூவரும் 'கொடும், கொடும்' என்று கூறினீர்கள். அதனுல்தான் நான் கொடுத்தேன். ஆகையால் என்மேல் குற்றம் இல்லை" என்று செட்டியார் கூறினர். உடனே அவர்கள், செட்டியாரை அந்த ஊர் நியாயாதிபதியிடம் அழைத்துச் சென்று தங்கள் வழக்கைக் கூறினர்கள். அவர்கள் கூறியதை எல்லாம் பொறுமையாக நியாயாதிபதி கேட்டார். பிறகு அவர் சற்று யோசனை செய்தார். உடனே, "நல்லது; வழிப்போக்கர்களே, நீங்கள் சொன்னபடியே நால்வரும் சேர்ந்து வந்து கேட்டால் செட்டியார் அந்தப் பண முடிப்பைக் கொடுப்பார். இப்பொழுது நீங்கள் மூவர் மட்டும்தானே வந்து கேட்கிறீர்கள்" என்றார். இதைக்கேட்ட வழிப்

போக்கர் மூவரும் வெட்கம் அடைந்து தமது ஊருக்குப் போய்விட்டனர்.

புதிய சொற்கள்

அயலூருக்கு	செட்டியார்	வராமல்
எடுத்தார்கள்	அருகில்	உரத்து
பணத்தை	நால்வரும்	கூப்பிட்டான்
பங்கிடுவதை	அமர்ந்து	கொடும்
வழக்கிட்டனர்	தோண்டி	நெடுநேரம்
தீரவில்லை	அனுப்பினர்	காத்திருந்தனர்
மோசம்	பண்ணினீர்	முடிப்பை
ஒப்பிக்க	நியாயாதிபதி	அழைத்து
பொறுமையாக	சற்று	யோசனை
வழிப்போக்கர்	வெட்கம்	மூவரும்

பயிற்சி :

கீழே காணப்படும் சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமை.

பணமுடிப்பு, ஆலமரம், கிணறு.

வினுக்கள் :


1. வழிப்போக்கர் நால்வரும் ஏன் வழக்கிட்டனர்?
2. அவர்கள் என்ன சொல்லிச் செட்டியாரிடம் பணமுடிப்பைக் கொடுத்தார்கள் ?
3. அவர்கள் வழக்கைக் கேட்டு நியாயாதிபதி என்ன சொன்னர் ?

இலக்கணம்

ஒரு பொருளின் வினையை அறிவிப்பது வினைச் சொல் ஆகும். ‘அயலூருக்குப் போயினர், முடிப்பைக் கண்டு எடுத்தார்கள், இதைக் ‘கொடும்’. இங்கு உள்ள ‘போயினர், எடுத்தார்கள். கொடும்’—என்ற மூன்று சொற்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வினையைக் குறிப்பிடுகிறதல்லவா? ஆதலால் இவை **வினைச்சொற்கள்** எனப்படும். இவ்வாறு உனக்குத் தெரிந்த வினைச் சொற்கள் நான்கு கூறு,

---

3. என் வரலாறு



1. சிறுவர்களே, என்னை நீங்கள் நன்கு அறிவீர்கள். நான் உங்களுக்கு உயிர்த் தோழன். ஆனால் என் வரலாறு முழுதும் நீங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். நான் உங்கள் வீட்டுக் காவலாளி; உங்கள் ஊருக்கும் காவலாளியாய் இருக்கிறேன்.

2. உங்களுக்குத் தக்க வயது வரும் வரையில் பெற்றோர்கள் உங்களைக் காப்பாற்றுகிறார்கள். அவ்வளவு காலம் என்னை என் பெற்றோர் காப்பாற்றுவதில்லை. நான் பிறந்து ஒரு மாதமான உடன் நானே வெளியில் சென்று உணவைத் தேடிக்கொள்வேன்.

3. என் கால்கள் மிகவும் வலிவானவை. அவைகளில் கூர்மையான நகங்கள் இருக்கின்றன. என் பற்களும் கூர்மையானவை. எனக்கு மோப்பம் பிடிக்கும் வல்லமை உண்டு. மோப்பத்தால் நான் மனிதர்களை அறிந்துகொள்வேன். கொலை களவுகளையும் கண்டுபிடிப்பேன்.

4. நான் மிகவும் நன்றி உள்ளவன். என்னை வளர்ப்பவர் என்னை அடித்தாலும், பட்டினி போட்டாலும் நான் அவர் பின்னால் தொடர்ந்து செல்வேன். நான் அவருக்கு ஒரு நீங்கும் நினைக்கமாட்டேன்.

5. என்னை வளர்ப்பவர் ஏழையாகி உணவில்லாமல் துன்பப்பட்டாலும், நான் அவரை முன்போலவே நினைத்துக் காப்பேன். நான் பசி தாகமும் பாராமல் அவருடனே செல்வேன். எப்பொழுதும் அவருடன் இருக்கவே நான் விரும்புவேன். தேவைப்

படும்போது என் உயிரையும் பொருட்படுத்தாமல் சென்று தலைவனைக் காப்பாற்றுவேன்.

6. நான் நீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்றியிருக்கிறேன்; நெருப்பில் அகப்பட்டவர்களையும் காப்பாற்றியிருக்கிறேன். பெரிய ஆட்டு மந்தைகளை நான் ஒருவனுகவே காப்பேன். நான் திருடர்களைப் பிடித்திருக்கிறேன். என் இனத்தவருள் ஆயிரக் கணக்கான ரூபாய் மதிப்பு உள்ளவரும் சிலர் இருக்கின்றனர்.

7. நான் சோறு, இறைச்சி முதலியவற்றை உண்பேன். எனக்குக் கூர்மையான வளைந்த பற்கள் இருப்பதால், இறைச்சியை என்னுல் கிழித்துத் தின்னமுடியும்.

8. எனது வால் எப்போதும் வளைந்திருக்கும். எனக்கு மகிழ்ச்சி உண்டானுல் நான் வாலை ஆட்டி அதைத் தெரிவிப்பேன்.

9. இப்பொழுது, நான் யார் தெரியுமா? என் பெயர் நாய் என்பதை நீங்கள் இதற்குள் அறிந்திருப்பீர்கள்.

புதிய சொற்கள்

வரலாற்றை	நகங்கள்	அடித்தாலும்
காவலாளி	மோப்பம்	தீங்கு
தக்க	கொலை	நீனைக்க

வயது	களவு	துன்பப்பட்டாலும்
காப்பாற்று	வளர்ப்பவர்	மதிப்பு
பட்டினி	திருடர்களை	இறைச்சி
தாங்கி		தலைவன்

பயிற்சி :

I. எதிர்ச் சொல் கூறு?

உண்டு, தீங்கு, பின்னால்.

II. கோடிட்ட இடங்களை நிரப்பு?

1. என் கால்கள் மிகவும்———

2. நான் —— ஒரு ——— நினைக்கமாட்டேன்.

3. நான் —,— முதலியவை தின்பேன்.

வினாக்கள் :

1. நாயின் நகங்கள் எவ்வாறு இருக்கும்?
2. நாய் மோப்பத்தால் எவற்றைக் கண்டுபிடிக்கும்?
3. நாய் நன்றி உள்ள விலங்கு என்று எப்படித் தெரிகிறது?
4. நாயின் உணவுகள் எவை?
5. நாயின் வால் எவ்வாறு இருக்கும்?
6. நாய் எப்பொழுது வாலை ஆட்டும்?

இலக்கணம்

நாய், நாய்கள் ; கால், கால்கள் ; நகம், நகங்கள் ; ஏழை, ஏழைகள் ; ஆடு, ஆடுகள். இவற்றில் நாய் என்பது ஒரு நாயைக் குறிக்கும். நாய்கள் என்பது பல நாய்களைக் குறிக்கும்—அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட நாய்களைக் குறிக்கும். ஒன்றைக் குறிப்பது ஒருமை ; ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைக் குறிப்பது பன்மை.

4. தபால்

(உரையாடல்)



சகுந்தலை: அப்பா, உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

தகப்பனார்: சகுந்தலை, எங்கே? கொடு!

சகு: என்ன அப்பா, உறையைப் பிரிக்காமல் மேலே ஏதோ பார்க்கிறீர்களே?

தகப்: எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறேன்.

சகு: மேலே பார்த்தால் எப்படித் தெரியும்?

தகப்: உறையின் மேல் தபால் நிலையத்தின் முத்திரை இருக்கிறதல்லவா? அதனால் தெரிந்து கொள்ளலாம்.

சகு : உறைக்குப் பின் ஒரு முத்திரை போட்டிருக்கிறதே! இது எதற்காக?

தகப் : இது நமது ஊர் தபால் நிலையத்தின் முத்திரை.

சகு : இந்த முத்திரை எதைக் காட்டுகின்றது?

தகப் : இது, வந்த தேதியைக் காட்டுகிறது.

சகு : அப்படியானால் ஒரு கடிதத்தின் மேலுள்ள முத்திரைகளினால் எவைகளை எல்லாம் தெரிந்து கொள்ளலாம், அப்பா?

தகப்: எந்த ஊரிலிருந்து வந்ததோ அந்த ஊரின் பெயரும், தபால் போடப்பட்ட தேதியும், தபால் எந்த ஊருக்கு வந்ததோ அந்த ஊரின் பெயரும், அது அந்த ஊருக்கு வந்த தேதியும் தெரிந்து கொள்ளலாம்.

சகு: அப்படியா! இப்பொழுதுதான் முத்திரை போடுவது ஏன் என்று எனக்குத் தெரிகிறது.

புதிய சொற்கள்

கடிதம்	நிலையம்	தேதி
வந்திருக்கிறது	முத்திரை	உறை
தபால்	குறிப்புகள்	பிரிக்காமல்
கிடைக்கிறது		காட்டுகிறது

வினுக்கள் :

1. கடிதத்தின் மேலே எந்த முத்திரை காணப் படும்?
2. கடிதத்தின் பின்புறம் எந்த முத்திரையைக் காணலாம்?
3. தபால் முத்திரைகளில் எந்த எந்தத் தேதிகள் இருக்கும்?
4. நம் வீட்டில் தபாலைக் கொண்டுவந்து கொடுப்பவர் யார்?

இலக்கணம்

கீழுள்ளவற்றில் ஒருமை, பன்மைகளை எடுத்து எழுது.

ஊர், முத்திரை, கடிதங்கள், உறை, குறிப்புகள், மாடுகள், தபால்.

---

5. பாரி வள்ளல்

1. யார் எதைக் கேட்டாலும் இல்லை என்று மறுக்காமல் கொடுப்பதே சிறந்த கொடை. அவ்வாறு கொடுக்கும் தன்மை உடையவர்களை வள்ளல்கள் என்று கூறுவர்.

2. முன் காலத்தில் நம் தமிழகத்தில் அத்தகைய வள்ளல்கள் பலர் இருந்தனர். அவர்களுள் பாரி வள்ளல் ஒருவர்.

3. பாரி என்பவர் பறம்புநாட்டு அரசர். அந்த நாட்டில் உள்ள மலைக்குப் பறம்பு மலை

என்பது பெயர். அந்த மலையைச் சுற்றி மூந்நூறு ஊர்கள் இருந்தன. பாரியின் கொடையைப் புகழ்ந்து புலவர் பலர் பாடியுள்ளனர். அவர்களுள் சிறந்தவர் கபிலர், ஔவையார் ஆகிய இருவரும் ஆவர். அப் பாரியைப் பாடிய புலவர் எவரும் வெறுங் கையுடன் செல்லாது பரிசு பெற்றே செல்வர். அதனால் 'கொடையிற் சிறந்தவர் பாரி' என்ற புகழ்மொழி தமிழ் நாட்டில் வழங்கியது.

4. பறம்புநாடு இயற்கை வளங்கள் நிறைந்திருந்தது. மலையைச் சார்ந்த நாடு ஆதலால் அங்கு மயில்களும் குயில்களும் கூட்டம் கூட்டமாய் வாழ்ந்தன. அந்நாட்டில் மரம், செடி, கொடிகள் மிகுதியாக இருந்தன.

5. பாரி வள்ளல் ஒரு நாள் காட்டில் உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வதற்காகத் தேரில் ஏறிக்கொண்டு சென்றார்.

6. அவர் சென்ற வழியில் ஒரு முல்லைக் கொடி கீழே விழுந்து கேட்பாரற்றுக் கிடந்தது. கொடி படர்வதற்கு ஏதாவது ஒரு கொழுகொம்பு வேண்டும் அல்லவா? அங்கே அருகில் ஒரு கொம்பும் இல்லாமையால் அக்கொடி தரையில் கிடந்தது. "ஐயா, நீங்

கள் அளவில்லாமல் கொடுத்து எல்லாரையும் காப்பாற்றும் நாட்டில் என்னை ஆதரிப்போர் எவருமில்லையா ?" என்று அது பாரியைக் கேட்பதுபோல் இருந்தது.



7. பாரி அக்கொடியை உற்று நோக்கினார். மனத்தில் மிக்க இரக்கம் கொண்டார்; தேரினின்றும் இறங்கினார். குதிரைகளை அவிழ்த்து அப்பால் கொண்டுபோய்க் கட்டினார். கீழே விழுந்து கிடந்த அக்கொடியை மெதுவாக எடுத்து அத்தேரின்மீது படர விட்டு மனம் மகிழ்ந்தார். முல்லைக்கொடியும் அவர் செய்கைக்கு மகிழ்வது போல் காற்றில் அசைந்தது.

8. பிறகு பாரி தம் ஊருக்கு நடந்தே சென்ருர். இவ்வரலாற்றைக் கேட்ட பறம்பு நாட்டு மக்கள் வள்ளலின் செய்கையை நினைத்து வியந்தனர். இதனுல் பாரி, "முல்லைக்குத் தேர் ஈந்த மன்னர்" என்ற புகழ் பெற்ருர். செடி, கொடிகளிடத்தும் மன்னர் எவ்வளவு கருணை காட்டினுர் பார்த்தீர்களா?

புதிய சொற்கள்

மறுக்காமல்	வெறுங்கை	கேட்பார்
வள்ளல்	கொடை	உற்று
இரக்கம்	தமிழகம்	கிடந்த
நிறைந்து	அவிழ்த்து	படர
பறம்பு நாடு	அசைந்தது	செய்கை
கொழுகொம்பு	வேந்தன்	வரலாறு
ஆதரிப்போர்	புலவர்	புகழ்
வியந்தார்	கருணை	ஈந்த
வளங்கள்	தன்மை	பரிசு
நோக்கினுர்	சார்ந்த	மனத்தில்

பயிற்சி :

I. எதிர்ச் சொற்கள் கூறு?

போகும், இறங்கி, மகிழ்ந்தார்.

II. கோடிட்ட இடங்களை நிரப்பு?

1. பறம்புமலையைச் சுற்றி —— இருந்தன.

2. பாரி தம் ஊருக்கு —— சென்ருர்.

வினக்கள் :

1. பாரி வள்ளல் எந்த நாட்டில் வாழ்ந்தவர் ?
2. பாரி எதனுல் புகழ் பெற்ருர் ?
3. பாரி காலத்தில் இருந்த சிறந்த புலவர் இருவர் யார் ?
4. பாரி முல்லேக்குச் செய்த உதவி யாது ?

இலக்கணம்

காலம் மூன்று வகைப்படும். அவை இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன. இவற்றில் இறந்த காலம் என்பது சென்று போன காலத்தைக் குறிப்பதாகும். 'பாரி தம் ஊருக்கு நடந்தே சென்ருர்'— என்பதில் சென்ருர் என்பது முன்பு நடந்த வினையைக் காட்டுகிறதல்லவா ? அதனுல் நடந்தேறிய வினையைக் குறிப்பிடுவது இறந்தகாலம் எனப்படும். அது இறந்த கால வினைச்சொல் என்றும் அழைக்கப்படும்.

---

6. கிளி

1. கிளி ஒரு பறவை. அது காடுகளில் கூட்டம் கூட்டமாய் வாழும்; நாடுகளிலும் மரப் பொந்துகளில் இருக்கும்.

2. அதற்கு அழகிய சிறகுகள் உண்டு. ஆனுல் அது அதிக உயரத்தில் பறக்காது. கிளியின் கால்களில் விரல்கள் இருக்கின்றன. அவைகள் மரக்கிளேயை உறுதியாய்ப் பிடித்துக்கொள்ள உதவுகின்றன.

3. கிளிக்குக் கூர்மையான அலகு இருக்கிறது. பறவையின் மூக்கை அலகு என்றும் கூறுவார்கள். அதன் உதவியால் கிளி பழங்களை விரும்பி உண்ணும்; கொட்டைகளையும் உடைத்துத் தின்னும். கிளியின் அலகு சிவப்பு நிறம் உடையது.



4. மற்றப் பறவைகளைப் போலன்றி, கிளிக்கு மட்டும் நாக்கு இருக்கிறது. அதனால் தான் கிளி பேச முடிகிறது. கிளி பேசுவதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? நாம் எதைச் சொல்கிறோமோ அதை அப்படியே அது திருப்பிச் சொல்லும். அதனால் 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை' என்ற பழமொழி எழுந்தது.

5. கிளி அழகாக இருக்கிறதே என்று அதைச் சிலர் கூட்டில் அடைத்து வைக்கின்றனர். அவ்வாறு அடைத்து வைப்பது தவறு. நம்மைச் சிறையில் அடைத்துவைத்தால் நமக்கு எவ்வளவு துன்பமாய் இருக்கும்? அது போல்தானே அக்கிளியும் துன்பப்படும். ஆதலால் நாம் பறவைகளைக் கூடுகளில் அடைத்துவைக்கக் கூடாது.

புதிய சொற்கள்

காடுகளில்	சிறகுகள்	கொட்டை
கூட்டம்	உறுதியாய்	உடைத்து
வாழும்	உதவுகின்றன	எழுந்தது
பொந்துகளில்	கூர்மையான	விரும்பி
மட்டும்	அன்றி	தவறு
துன்பம்	அலகு	சிறை
அடைத்து	பறவை	அன்பு

பயிற்சி :

சரியாகப் பொருத்து ?

I. 1. பொந்துகளில் — 1. சிவப்புநிறம்
2. அலகு — 2. வாழும்
3. உடைத்து — 3. பேசும்
4. கிளி — 4. தின்னும்

II. கோடிட்ட இடங்களை நிரப்பு ?

1. கிளிக்கு______ அலகு______.
2. சொன்னதை______ கிளிப்______.
3. பறவைகளிடம்______ இருக்கவேண்டும்.

வினக்கள் :


1. கிளிகள் காடுகளில் எப்படி வாழும் ?
2. கிளி விரல்களால் என்ன செய்கிறது ?
3. அலகு என்ற சொல் எதைக் குறிக்கும் ?
4. கிளியை நாம் என்ன செய்யக்கூடாது ?
5. கிளியைப் பற்றி எழுந்த பழமொழி யாது ?

இலக்கணம்

இப்பாடத்திலிருந்து ஐந்து பெயர்ச்சொற்களை எடுத்து எழுது ?

---

7. பசுவும் கன்றும்



தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி 1.

அம்மா என்குது
வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி. 2.

நாவால் நக்குது
வெள்ளைப் பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி. 3.

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி. 4.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

அருஞ்சொற் பொருள் :


மேயுது—மேய்கிறது ; அண்டையில்—அருகில் ; முட்டி— தலையால் இடித்து.

புதிய சொற்கள்

மேயுது	அண்டையில்	குடிக்குது
துள்ளி	ஓடுது	மடி
குதிக்குது	நக்குது	கொடுக்குது

வினாக்கள்

1. வெள்ளைப் பசு எங்கு மேய்ந்தது ?
2. எது துள்ளிக் குதித்தது?
3. வெள்ளைப் பசு கன்றை என்ன செய்தது ?
4. கன்றுக்குட்டி எப்படி பால் குடித்தது ?



8. உழவு

1. நமது நாட்டு மக்களில் பெரும் பான்மையினர் என்ன தொழில் செய்கின்றனர் தெரியுமா ? அவர்கள் செய்வது உழவுத் தொழில்தான். நிலத்தை உழுது பயிர் செய்வதே இந்தியருக்கு முக்கியமான தொழிலாகும். உழவுக்கு முக்கியமாக வேண்டுவன எவை ? ஒரு கலப்பையும் இரண்டு எருதுகளுமேயாகும். ஆகையால், எருதுகளை வைத்துக் காப்பாற்றுவது அவர்களுக்கு முக்கியமான கடமையாகும்.

2. கலப்பை என்பது நிலத்தை உழுவதற்குப் பயன்படும் கருவி. அதன் அடியில் கூர்மையான ஓர் இரும்புத்துண்டு இருக்கும். அதைக் காறு என்று சொல்லுவார்கள். கலப்பையை மாடுகள் இழுத்துச் செல்லும்-

போது, உழவர் அதை நிலத்தில் சிறிது அழுத்துவார். அப்போது காறு பூமியில் ஆழமாக ஊன்றி மண்ணைப் பெயர்க்கும்.

3. உழவர் நிலத்தை ஒரு மூலையிலிருந்து உழத் தொடங்குவார். உழும்போது நிலத்தில் பள்ளமாகப் பிளவு விழும். அந்தப் பிளவுக்குப் படைச்சால் என்பது பெயர். நிலத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குச் சென்றதும் மறுபடியும் உழவர் திரும்பிப் படைச்சாலின் பக்கமாக உழுதுவருவார். இவ்விதம் நிலத்தை நீள வடிவத்தில் உழுத பிறகு மறுபடியும் குறுக்காக ஓட்டி உழுவார். அப்பொழுதுதான் நிலம் முழுவதும் நன்றாக உழப்பட்டுப் புழுதியாகும்.

4. நிலத்தை உழவர் எவ்வளவு ஆழமாக உழுகிறாரோ அவ்வளவு அவர் நிலத்திலிருந்து பயன் பெறுவார். 'அகல உழுவதை விட ஆழ உழு' என்பது பழமொழி. ஐரோப்பா முதலிய நாடுகளில் மாடுகளுக்குப் பதிலாகக் குதிரைகளைக் கட்டி நிலத்தை உழுவார்கள். இப்பொழுது இயந்திரங்களாலும் உழுகிறார்கள்.

5. நிலத்தில் பயிர் செய்வதற்கு முன் அதை நன்றாகப் பதப்படுத்தினால்தான் பயிர்

செழிப்பாக வளரும். இதற்காகவே உழவர் நிலத்தை நன்றாக உழுவார். பிறகு அதில் எருவைப் போடுவார். அப்புறம் நீர் பாய்ச்சு வார். அப்போதுதான் நிலம் சேறாகும்; செழிப்பாக இருக்கும்.

6. சேறாயிருக்கும் நிலத்தை உழவர் சமப்படுத்துவார். சமப்படுத்தப் பரம்புச் சட்டம் என்ற கருவியைப் பயன்படுத்துவார். இதையே 'பரம்படித்தல்' என்பார்கள். இந்தச் சட்டமானது நீண்ட பிடியுள்ள ஒரு பலகை. அப்படி நிலத்தை உழுது பரம்பு அடித்த பிறகே உழவர் விதை விதைப்பார் அல்லது நாற்று நடுவார்.

7. நாற்று நன்றாக வளரும்போது அதனுடன் வேறு சில செடிகளும் முளைக்கும். அவைகளை உழவர் பிடுங்கி எடுத்து விடுவார். இதற்குக் களை எடுத்தல் என்பது பெயர்.

8. பயிர், நன்றாக வளர்ந்தபிறகு கதிர் விட்டு முற்றிப் பழுக்கும். அவ்வாறு விளைந்த நெல் முதலிய தானியங்களை மக்கள் அறுவடை செய்து கொண்டுவந்து வீட்டில் வைத்துக்கொள்வார்கள்.

புதிய சொற்கள்

உழவர்	காறு	நீளவடிவம்
பெரும்பான்மையினர்	பள்ளம்	குறுக்காக
தொழில்	பிடுங்கி	புழுதி
இந்தியர்	களை	பதப்படுத்தி
கலப்பை	அழுத்து	எரு
காப்பாற்றுவது	ஊன்றி	பாய்ச்சுவர்
செடி	பெயர்க்கும்	முற்றி
முளைக்கும்	மூலையில்	பழுக்கும்
கடமை	பிளவு	சேறு
கருவி	படைச்சால்	சமப்படுத்து
அடி	கதிர்	பரம்படித்தல்
கூர்மை	அறுவடை	விதை
பரம்புச் சட்டம்	நாற்று	தானியங்கள்

பயிற்சி :

1. அடியிற் காணும் வாக்கியங்களை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது ?

(உ-ம்) உழவுக்கு ஒரு கலப்பையும் இரண்டு எருதுகளும் தேவை. உழவுக்கு ஒரு கலப்பை தேவை ; இரண்டு எருதுகள் தேவை.

(1) உழவர் நிலத்தை உழுது பரம்படிப்பர்.

(2) மாடு புல்லையும் வைக்கோலையும் தின்னும்.

II. கீழ்வரும் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது ?

கலப்பை, நாற்று, உழவர்.

வினாக்கள் :

1. இந்தியர்களின் முக்கியமான தொழில் எது ?

2. அந்தத் தொழிலுக்குத் தேவையான கருவிகள் எவை ?

3. 'காறு' என்பது எதற்குப் பெயர் ?

இலக்கணம்

இப்பாடத்திலிருந்து வினைச் சொற்கள் ஐந்தை எடுத்து எழுது ?

---

9. புகழேந்திப் புலவர்

1. செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன் விளைந்த களத்தூர் என்ற ஒரு கிராமம் உண்டு. அக்கிராமத்தில் புகழேந்திப் புலவர் என்ற பெரும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வேளாளர் மரபில் பிறந்தவர். சிறுவயதிலேயே தமிழ் பயின்றார். அவர் பல தமிழ்ப் பாட்டு நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றுள் சிறப்பானது நளவெண்பா ஆகும்.

2. புகழேந்திப் புலவர் காலத்தில் மதுரையில் வரகுண பாண்டியன் என்ற அரசன் ஆண்டுவந்தான். மதுரை பாண்டிய நாட்டுக்குத் தலைநகராக விளங்கிற்று. பாண்டிய மன்னன் புகழேந்தியாரை வரவழைத்து, தன் அவையின் தலைமைப் புலவராக்கி, தன் மகளுக்குத் தமிழ் கற்பிக்கச் செய்தான். பாண்டியன் மகள் நன்கு தமிழ் கற்றுவந்தாள்.

3. அரசிளங்குமரி தக்க வயது அடைந்ததும், குலோத்துங்க சோழன் என்னும் சோழநாட்டு மன்னனை மணந்தாள். அவள் தன் கணவனுடைய நாட்டுக்குச் செல்லும்போது, புகழேந்தியாரையும் தன்னுடன் அழைத்துச் சென்றாள்.

4. அந்நாளில் சோழ நாட்டில் சோழ மன்னன் அவையில் ஒட்டக்கூத்தர் என்ற புலவர் இருந்தார். அவர் புகழேந்தியார்மீது பொறாமைக் கொண்டார். அரசரிடம் கோள் சொல்லி, அவரைச் சிறையில் அடைத்தார். புகழேந்தியார் சிறையில் இருந்தபொழுது பவளக்கொடிமாலை, அல்லியரசிமாலை முதலிய நூல்களைப் பாடினார்.

5. புகழேந்தியார் சிறையில் இடப்பட்ட செய்தி சோழ அரசிக்குத் தெரிந்தது. அரசி அவரை விடுவிக்க விரும்பினாள். அதனால் ஒரு நாள் அவள் ஓர் அறைக்குள் சென்று தாழ் இட்டுக்கொண்டாள்; அரசர் கதவைத் தட்டியும் திறக்கவில்லை. அவளைச் சமாதானப் படுத்த அரசர் ஒட்டக்கூத்தரை அனுப்பினார். அப்பொழுது அவர் வந்து ஒரு பாட்டுப் பாடினார். அது கேட்ட அரசி கீழிருந்த தாழையும் சேர்த்து இரட்டைத் தாழ்ப்பாள்

போட்டாள். ஒட்டக்கூத்தர் முயன்றும் பயன் உண்டாகவில்லை.

6. கடைசியில் புகழேந்தியார் சென்று பல செந்தமிழ்ப் பாடல்கள் பாடி, அரசியின் கோபத்தைத் தணிவித்தார். அதனால் புகழேந்தியார் சிறையிலிருந்து விடுதலையடையப் பெற்றார். அவர் சோழ நாட்டில் சின்னாட்கள் தங்கியிருந்து, பிறகு பாண்டிய நாட்டை அடைந்தார். பாண்டிய நாட்டில் சென்று தங்கியிருந்தபோது, நளனைப் பற்றிய கதையை நூலாகப் பாடினார். இந்த நூலுக்கு நளவெண்பா என்பது பெயர். அந்த நூலால் புகழேந்தியாரின் பெயர் இன்னும் நிலைத்து நிற்கின்றது.

புதிய சொற்கள்

செங்கற்பட்டு	பயின்றார்	நிலைத்து
பொன்விளைந்த	நளவெண்பா	சோழன்
களத்தூர்	மதுரையில்	மன்னன்
மாவட்டம்	வரகுணன்	மணந்தாள்
புகழேந்தி	பாண்டியர்	கணவன்
வேளாளர்	தலைநகராக	அவையில்
மரபில்	பொருமை	தாழிட்டு
ஒட்டக்கூத்தர்	சமாதானம்	தாழ்ப்பாள்
கோள்	அல்லிஅரசி	தணிவித்தார்
குலோத்துங்கன்	பவளக்கொடி	கற்பிக்க

பயிற்சி :

I. சரியாகப் பொருத்து ?

1. மன்னனை	1. கற்றுள்
2. மகள்	2. மணந்தாள்
3. தாழ்ப்பாள்	3. பாடினர்
4. புகழேந்தியார்	4. போட்டாள்

II. கோடிட்ட இடங்களை நிரப்பு ?

(1) புகழேந்திப் புலவர்——பாடினர்.

(2) அரசிளங்குமரி——சோழனை மணந்தாள்.

(3) புகழேந்தி——பிறந்தார்.

வினக்கள் :

1. புகழேந்தியார் இயற்றிய சிறந்த நூல் எது ?
2. புகழேந்தியார் எப்படி அரசியின் கோபத்தைத் தணிவித்தார் ?
3.. பாண்டிய நாட்டின் தலைநகரம் எது ?

இலக்கணம்

இப்பாடத்திலிருந்து ஒருமை பன்மை வார்த்தைகள் வகைக்கு நான்கு எடுத்து எழுது.

10. கொடுத்து வைத்தது கிடைக்கும்

1. ஓர் ஊரில் ஒரு வணிகன் இருந்தான். ஒரு நாள் அவன் பத்து ரூபாய்க்கு ஒரு மீன் வாங்கினன். அதன் வயிற்றில் வைரக்கல் ஒன்று இருந்தது. அதை அவன் அதிக விலைக்கு விற்க எண்ணினன்.

2. நேரே அவ்வூர் அரசனிடம் சென்ருன்; வைரத்தைக் காட்டினுன். அரசன் வைரத்தைப் பார்த்து மகிழ்ந்தான். "உனக்குத் தேவையான பொருளை என் நிதிச்சாலையினின்று எடுத்துச்செல். அப்படிச் செய்வது இன்று பன்னிரண்டு மணிக்குள் முடிந்துவிடவேண்டும்," என்று வணிகனைப் பார்த்து அரசன் சொன்னுன்.

3. வணிகனும், அதற்கு ஒப்புக்கொண்டான். நிதிச்சாலையில் உள்ள பொருள் யாவற்றையும் எடுத்துவரத் திட்டமிட்டான்.

4. உடன் பத்து வண்டிகளைக் கொண்டுவந்தான். நிதிச்சாலைக்குள் காலை பத்து மணிக்குக் சென்ருன். அங்கு ஒரு அறையில் இருந்த பொன், முத்து, நாணயம் முதலிய குவியல்களைக் கண்டு வியந்து நின்ருன். அதற்குள் மணி பன்னிரண்டு தொடங்கியது. காவலாளி உடனே அவனை வெளியே போக உத்தரவிட்டான். அவனுக்கு அருகில் ஒரு வெள்ளி நாணயக் குவியல் இருந்தது. அதிலிருந்து கை நிறைய ஒரு பிடி அள்ளிக் கொண்டான்.

5. மணி பன்னிரண்டு அடித்துவிட்டது. ஆகையால் அவன் வெளியே வந்து

வண்டிக்காரர்களுக்குப் பேசிய வாடகைப் பணத்தைக் கொடுத்தான். கையில் மிகுந்திருந்த காசை எண்ணிப் பார்த்தான். அதில் இருந்தது பத்தே ரூபாய் தான். அவன் மீனை என்ன விலைக்கு வாங்கினானோ அதே விலை மதிப்பு அவனுக்குக் கிடைத்தது. ஆகையால் கொடுத்து வைத்ததுதான் கிடைக்குமன்றோ ?

புதிய சொற்கள்

வணிகன்	நாணயம்	வாடகை
வைரக்கல்	குவியல்	மிகுந்திருந்த
தேவையான	காவலாளி	உத்தரவு

வினாக்கள் :

1. வணிகன் மீனை எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினான் ?
2. அரசன் வணிகனிடம் என்ன சொன்னான் ?
3. வணிகன் நிதிச்சாலையில் என்ன செய்தான் ?
4. வணிகனுக்குக் கடைசியில் மிஞ்சியது எவ்வளவு ரூபாய் ?

11. காகமும் நாகமும்

1. ஒரு காட்டிலே காக்கையொன்று மரத்தில் கூடுகட்டியிருந்தது. அது நாளடைவில் முட்டைகளிட்டு, அவைகளை அன்புடன் காத்து வந்தது.

2. மரத்தின் கீழே உள்ள புற்றில் பாம்பு ஒன்று வாழ்ந்துவந்தது. அது மரத்தின் மேல் ஏறி அக்காக்கை இடும் முட்டைகளை எல்லாம் உடைத்துக் குடித்து வந்தது.

3. இதைக் கண்டு காகம் நடுங்கி வருந்திற்று. வயதான ஒரு நரியினிடம் சென்று யோசனை கேட்டது. நரி காகத்தைப் பார்த்து, "இந்த ஊர் அரசன் மனைவி குளிக்கும் அறைக்குச் செல். அங்கு அரசி கழற்றி வைக்கும் ஒரு வைர மாலையைக் கொத்திக் கொண்டு வந்து இப்புற்றினுள் போடு. உடனே அரசன் ஏவலாளர்கள் மாலையைத் தேடி இப்புற்றினிடம் வருவார்கள், புற்றை உடைத்து மாலையை எடுப்பார்கள். அப்பொழுது பாம்பையும் கொல்வார்கள்" என்று கூறிற்று.

4. அந்த யோசனைப்படியே காகமும் செய்தது. அரண்மனைக் காவலாளர்கள் புற்றைக் கலைத்து, பாம்பை வெட்டி, அரசியின் வைர மாலையை எடுத்துச் சென்றனர்.

5. ஆகையால் "சூழ்ச்சியால் ஆகாத செயல் எதுவும் இல்லை" என்று தெரிகிறது.

புதிய சொற்கள்

புற்றில்	செயல்	சூழ்ச்சி
உடைத்து	கலைத்து	ஆகாத
யோசனை	கொத்தி	அரண்மனை
வயதான	ஏவலாளர்	காவலாளர்

பயிற்சி :

எதிர்ச்சொல் கூறு ?

இந்த, சென்று, வயதான.

வினாக்கள் :

1. காகம் எங்கு வசித்து வந்தது ?
2. பாம்பு பல முறை என்ன செய்தது ?
3. நரி கூறிய தந்திரம் யாது ?
4. அரண்மனைக் காவலாளர்கள் என்ன செய்தனர் ?

12. கவிஞர் வீரராகவர்

1. தமிழ் நாட்டின் ஒரு பகுதி தொண்டை நாடு எனப்படுவது. அத் தொண்டை நாட்டில் பொன் விளைந்த களத்தூருக்கு அருகில் பூதூர் என்ற ஒரு சிறிய ஊர் இருந்தது. அதில் வடுகநாத முதலியார் என்பவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவரும் அவர் மனைவியாரும் நல்ல குணமும், ஏழைகளிடத்தில் இரக்கமும் உடையவர்களாய் இருந்தார்கள்.

2. அவர்களுக்கு நெடுநாள் கழித்து ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது பிறக்கும் போதே கண் குருடாய் இருந்தது. அதனால் பெற்றோர் மனம் வருந்தினார்கள். அக் குழந் தைக்கு வீரராகவன் என்று பெயரிட்டார்கள்.

3. குழந்தை வீரராகவன் வளர்ந்து கல்வி கற்கும் பருவத்தை அடைந்தான். மற்ற வீட்டுப்பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக் கூடம் போவதைப் போலத் தானும் போக வேண்டும் என்று அவன் விரும்பினான். பெற் றோரிடம் சென்று தன்னைப் பள்ளிக்கூடத் துக்கு அழைத்துச் செல்லும்படி கூறினான். அவன் வார்த்தைகளைக் கேட்ட பெற்றோர் மனம் வருந்தினர்.

4. மகனைப் பார்த்து, "குழந்தாய், நீ பள்ளிக்கூடத்துக்குப் போய் எப்படிப் படிப் பாய்? உனக்குக் கண் தெரியாதே!" என்றார்கள். அதற்கு அவன் தந்தையைப் பார்த்து, "அப்பா, ஆசிரியர் என் முதுகில் எழுத்துக் களை எழுதிக் காட்டினால் நான் புரிந்துகொள் வேன். மற்றப்பிள்ளைகள் பாடங்களைப் படிக் கும்போது நான் கேட்டுக்கொண்டிருந்து அவைகளைத் தெரிந்துகொள்கிறேன்," என் றான்.

5. அவ்வாறே வடுகநாத முதலியார் தம் மகனை அழைத்துக்கொண்டுபோய் ஆசிரியரிடம் கூறிப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து வைத்தார். கல்வியில் கருத்து உடைய வீரராகவன் நன்ருகப்படித்து, கல்வியில் தேர்ச்சி அடைந்தான்.

6. பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பிறகு அவன் காஞ்சிபுரம் சென்று அங்கு இருந்த பெரிய புலவர்களிடம் பல நூல்களைப் படித்தான்; அந்தப் புலவர்கள் பாடல்களைக் கூறும்போது காதால் கேட்டு மனப்பாடம் செய்துகொண்டான். நாளுக்குநாள் கல்வி வளர்ந்தது. பிறகு தானே புதியபாடல்களைப் பாடும் வல்லமை அடைந்தான். அதனுல் எல்லோரும் அவனை கவிஞர் என்று புகழ்ந்தனர். அதுமுதல் அவருக்குக் கவிஞர் வீரராகவர் என்ற பெயர் வழங்கலாயிற்று. நாளடைவில் அவர் பெரும்பொருள் ஈட்டினுர்.

7. மாணவர்களே, வீரராகவர் கண் குருடாய் இருந்தாலும் மிகுந்த ஆவலோடு கற்றதனுல் பெரிய புலவர் ஆனுர்; பெருஞ் செல்வத்தை அடைந்தார். ஆதலால் "ஊக்கம் உடையவர்கள் மேன்மை அடைவார்கள்" என்பது தெரிகிறது அல்லவா?

புதிய சொற்கள்

தமிழ்நாடு	குருடு	கவிஞர்
தொண்டை நாடு	பருவம்	ஆவலோடு
களத்தூர்	அழைத்து	ஊக்கம்
பூதூர்	முதுகில்	மேன்மை
ஊர்	கருத்து	புலவர்
இரக்கம்	காஞ்சிபுரம்	நெடுநாள்

பயிற்சி :

I. பிரித்துக் காட்டு ?

1. தேர்ச்சியடைந்தான். 2. நூல்களைப் படித்தான். 3. வழங்கலாயிற்று. 4. பெற்ருேரிடம்.

II. எதிர்ச் சொல் கூறு ?

அருகில், நல்ல, ஏழை, ஆண்.

வினுக்கள் :


1. கவிஞர் வீரராகவர் எங்குப் பிறந்தார் ?
2. அவர் எவ்வாறு கல்வி கற்ருர் ?
3. அவரை எல்லோரும் எவ்வாறு புகழ்ந்தனர் ?
4. இந்தப் பாடத்தால் நாம் தெரிந்துகொள்வது என்ன ?

இலக்கணம்

(,) இது காற்புள்ளி எனப்படும். ஒரு வாக்கியம், பொருள் முற்றுப் பெருமல் தொடர்ந்து செல்வதை இக்குறி தெரிவிக்கிறது.

இப்பாடத்திலுள்ள காற்புள்ளிகளைப் பார் ?

13. யானை



1. யானை ஒரு காட்டு விலங்கு. அது மிகப் பெரிய உருவம் உடையது. அதன் தும்பிக்கை மிக நீளமானது. யானை தன் தும்பிக்கையால் பெரிய மரத்தையும் அசைத்து வேருடன் பிடுங்கிவிடும். அது, தனக்குத் தீமை செய்தவர்களை ஒரு நாளும் மறவாது. யானை காடுகளில் கூட்டம் கூட்டமாகவே செல்லும்.

2. யானையின் வாய்ப்பக்கங்களில் இரு கொம்புகள் உள்ளன. அவைகளைத் தந்தம் என்று சொல்லுவார்கள். தந்தம் வெண்மை நிறமாய் இருக்கும். அதனால் பல பொருள்கள் செய்யலாம். அவை மிகுந்த விலைக்கு விற்கப் படுகின்றன. யானைத் தந்தம் மிகுந்த விலை உடையது. யானையின் விலையும் மிக அதிகம் ஆகும்.

3. யானையைப்பற்றிச் சில பழமொழிகள் உள்ளன. அவைகளுள் யானை இருந்தா

லும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பது ஒன்று.

4. யானைக்குத் தீனிச்செலவு அதிகமாக ஆவதால், எல்லோரும் அதை வளர்க்க முடியாது. பெருஞ் செல்வர்கள் மட்டுமே அதை வளர்க்க முடியும்.

5. யானை அரிசியையும், கரும்பையும் விருப்பத்துடன் உண்ணும். அது நீர் நிலைகளில் மகிழ்வோடு விளையாடும்.

6. யானையின் கால்கள் உரல் போன்று இருக்கும். காது முறம் போன்று காணப்படும். கோயில் யானைகளுக்கு மணி கட்டி வைப்பது வழக்கம். இதனால் 'யானை வரும் பின்னே ; மணி ஓசை வரும் முன்னே' என்ற பழமொழி வழங்குகிறது.

புதிய சொற்கள்

உருவம்	தந்தம்
தும்பிக்கை	தீனி
அசைத்து	செலவு
பிடுங்கி	உண்ணும்
கொம்புகள்	நீர்நிலை

பயிற்சி :

கோடிட்ட இடங்களை நிரப்பு?

1. யானையின் ——— மிக நீள ———.
2. யானையை எல்லோரும் ——— முடியாது.

வினாக்கள் :

1. யானையின் உருவம் எப்படி இருக்கும் ?
2. யானைத் தந்தம் எதற்குப் பயன்படும் ?
3. யானை எவைகளை விரும்பி உண்ணும் ?
4. யானையைப்பற்றி இரண்டு பழமொழிகள் கூறு?

14. நல்ல வழக்கங்கள்

சுத்த உணவிலும் சுத்த உடையிலும்
சொன்ன விதிகளை விட்டுவிட்டோம்;
நித்தம் குளிப்பதும் பத்தியம் காப்பதும்
மெத்தக் குறைந்தது தேசத்திலே. 1.

காலையி லெழுந்து நீராடல் கொஞ்சம்
கர்த்தனை யெண்ணித் துதிபாடல்,
மாலையி லோடி விளையாடல் இந்த
மார்க்கத்தை விட்டனர் மக்களெல்லாம். 2.

நல்ல வழக்கங்கள் உள்ளவர் தங்களை
நாடுமோ நோவுகள் எந்நாளும்,
நல்ல வழக்கங்கள் நாளும் வளர்ந்தினி
நாடு செழித்திட வேணுமடி. 3.

—நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.

அருஞ்சொற் பொருள் :

பத்தியம்—அளவோடு உண்ணல்
மெத்த—நிரம்ப
கர்த்தனை—கடவுளை
நாளும்—தினமும்

புதிய சொற்கள்


விதிகளை	மார்க்கத்தை
நித்தம்	நாடுமோ
பத்தியம்	எந்நாளும்
மெத்த	செழித்திட
கர்த்தனை	வேணும்

வினுக்கள் :

1. நாம் எவற்றை விட்டுவிட்டோம் ?
2. நம் தேசத்தில் எவை குறைந்துவிட்டன ?
3. எவரை நாளும் நோய்கள் அணுகா ?

---

15. நட்பு ஆராய்தல்-I



1. ஒரு காட்டில் ஒரு மானும் ஒரு காக்கையும் மிகவும் நட்பாய் வாழ்ந்துவந்தன. அந்தக் காட்டில் ஒரு மரத்தின்மேல் காகமும் அந்த மரத்தின்கீழ் மானும் இரவு நேரத்தில் தங்குவது வழக்கம். மான் புல்லைத் தின்று நன்ருகக் கொழுத்திருந்தது. ஒரு நாள் அதைப்பார்த்த ஒரு நரி எப்படியாவது அந்த

மானை வஞ்சனையால் கொன்று தின்ன வேண்டும் என்று நினைத்தது.

2. ஒரு நாள் நரி அந்த மானிடம் வந்து, "நான் நல்ல குணம் உடையவன்; உனக்கு வேண்டிய வேலைகளைச் செய்து உதவி செய்கிறேன்" என்று உறுதி கூறிற்று. நரி கூறிய வார்த்தைகளை மான் உண்மை என்று நம்பி, அதற்கு இடம் கொடுத்தது. நரியும் மானும் அன்று பகல் முழுவதும் நட்பாய்ப் பழகின.

3. அன்று இரவு மான், தன் புதிய நண்பனை மரத்தின்மேலிருந்த காகத்துக்கு அறிமுகப்படுத்தியது. நரியின் தந்திரத்தைக் காகம் தெரிந்துகொண்டது. அதனால் காகம் மானைத் தனியே அழைத்துக்கொண்டு போய் "முன் பின் தெரியாதவரிடம் நட்புச் செய்தால் தீமைதான் உண்டாகும். ஆதலால் நீ நரியை நம்பி ஏமாந்து போகாதே" என்று கூறியது. ஆனால் மான் அச்சொற்களை ஏற்றுக் கொள்ளாமல் நரியுடன் நெருங்கிப் பழகியது.

4. ஒரு நாள் நரி மானைப் பார்த்து, "நண்பா, நான் உனக்கு நல்ல இரை இருக்கும் இடத்தைக் காட்டுகிறேன், வா" என்று

அழைத்துக்கொண்டுபோய் அடுத்த காட்டில் உள்ள பசுமையான ஒரு நிலத்தைக் காட்டி-யது. மான் மகிழ்ந்து அந்த நிலத்தில் மேய்ந்துகொண்டு இருந்தது. அப்போது அங்கே கட்டியிருந்த ஒரு வலேயில் அது அகப்பட்டுக்கொண்டது.

---

16. நட்பு ஆராய்தல் —II

5. அப்பொழுது நரி அருகில் வந்து, "நண்பா, கவலேப்படாதே, நாளேக்கு நீ தப்பித்துக்கொண்டு வெளியில் வந்துவிட-லாம். இன்றைக்கு நான் விரதம் இருக் கிறேன். ஆதலால் இன்று தோல் வலேயை நான் கடிக்கமாட்டேன்," என்று கூறிவிட்டு அப்பால் ஓடி ஒரு புதருக்குள் மறைந்து கொண்டது. மான் இறந்த பிறகு அதன் இறைச்சியை உண்ணலாம் என்று நினேத்து ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்தது.

6. மாலே நேரத்தில் நண்பனுகிய காகம் மானேத் தேடிச்கொண்டு அங்கு வந்தது; தன் நண்பனின் நிலேயைக் கண்டது; உடனே மானுக்கு ஒரு தந்திரம் சொல்லிக் கொடுத்தது. "நீ செத்தவன் போலப் படுத்திரு. நான் பிணத்தைக் கொத்துவது

போல உன்னைக் கொத்திக்கொண்டு இருக்கிறேன். அப்போது நீ இறந்து விட்டாய் என்று நினைத்து வேடன் வலையை அவிழ்த்து, ஓர் இடத்தில் வைக்கப் போவான். அப்போது நான் கா, கா என்று கத்து-கிறேன். உடனே நீ எழுந்து ஓடிப்போ'' என்று கூறிற்று.

7. அப்படியே வேடன் வந்து பார்த்து வலையை அவிழ்த்தான். அப்போது காகம் கா, கா என்று கத்திற்று. மான் எழுந்து தப்பி ஓடிற்று. இதைக்கண்ட வேடன் ஒரு குறுந்தடியை எடுத்து மானை நோக்கி எறிந்தான். ஆனால் அந்தத்தடி, மான் இறைச்சியைத் தின்ன நினைத்து, அங்குப் புதரில் ஒளிந்து கொண்டிருந்த நரியின் தலைமேல் விழுந்தது. நரி உடனே இறந்துவிட்டது. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது உண்மையாயிற்று.

8. ஆகையால் நாம் ஆராய்ந்து பார்த்தே ஒருவருடன் நட்புச் செய்தல் வேண்டும். இல்லாவிடில், அது நமக்குத் துன்பத்தைக் கொடுக்கும். 'சேர் இடம் அறிந்து சேர்' என்பது ஔவையார் பொன்மொழி.

புதிய சொற்கள்

நட்பாய்	வேடன்	கொத்துவது
பல்லை	விரதம்	அவிழ்த்து
கொழுத்து	நிலையை	குறுந்தடி
வஞ்சனையால்	தந்திரம்	ஆராய்ந்து
கொல்ல	செத்தவன்	அறிமுகம்
நண்பனை	பிணத்தை	துன்பம்
கெடுவான்	கேடு	சேர் இடம்

பயிற்சி :

I. கீழ்க்கண்ட வார்த்தைகளை அமைத்து வாக்கியம் எழுது?

காகம், நரி, மான், தோல்.

II. கோடிட்ட இடங்களை நிரப்பு?

1. மான் ____________ காகத்துக்கு அறிமுகப் படுத்தியது.
2. மான் ____________ அகப்பட்டுக்கொண்டது.
3. குறுந்தடி ____________ தலைமேல் விழுந்தது.

வினுக்கள் :

1. காகம் நரியைப்பற்றி மானிடம் என்ன கூறிற்று?
2. நரி மானுடன் எதற்காக நட்புச் செய்தது?
3. மான் வலையில் சிக்கியபோது நரி என்ன கூறிற்று?
4. இக்கதையால் நீ அறிந்துகொள்ளும் நீதிகள் யாவை?

இலக்கணம்

இப்பாடத்திலிருந்து நிகழ்கால வினைச் சொற்கள் ஐந்து எடுத்து எழுது?

---

17. தொத்து நோய்
(உரையாடல்)

முத்து : அப்பா, இன்று என் பள்ளியில் அம்மை குத்துகிறவர் வந்தார். பிள்ளைகள் எல்லோருக்கும் அம்மை குத்தினார். அதனால் நானும் குத்திக்கொண்டேன்.

தகப்பனார் : மிகவும் நல்ல காரியம் செய்தாய். அம்மை என்பது மிகவும் கொடிய நோய். அது ஒருவித தொத்து நோய்.

முத்து : அதனால் என்ன தீமைகள் நேரிடும், அப்பா ?

தகப்பனார் : அக்கொடிய அம்மை நோயால் ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் இறக்கிறார்கள். சிலருடைய உடல் முழுவதும் புள்ளி புள்ளியாய் வடு உண்டாகிவிடும். சிலருக்கு அம்மை வார்த்தால் முகத்தில் உள்ள அழகு கெட்டு விடும். சிலருக்கு, கண் குருடாகிவிடும்.

முத்து : அம்மை குத்திக்கொண்டால் அந்த நோய் மறுபடியும் வராதா, அப்பா ?

தகப் : அம்மை குத்திக்கொண்டவர்களுக்குப் பெரும்பாலும் அந்நோய் வராது. வந்தாலும் அவர்களை அதிகம் துன்பப் படுத்தாது.

முத்து : அது நமக்கு வராமல் இருக்க நாம் என்ன செய்யவேண்டும் ?

தகப் : நாம் கூடியவரையில் சுத்தமான உடையை உடுத்தவேண்டும். தூய்மை-யான உணவையே உண்ணவேண்டும். நன்ருகக் காய்ச்சின நீரைக் குடிக்க வேண்டும் ; அம்மை நோய் கண்டவர்-களுடன் நெருங்கிப் பழகக் கூடாது. அப்படி இருந்தால் நமக்கும் அந்த நோய் வராது.

முத்து : தொத்து நோய்கள் இன்னும் எவைகள் இருக்கின்றன ?

தகப் : சொறி, சிரங்கு, காலரா, டைபாயிடு முதலிய நோய்கள் ஒருவருக்கு வந்தால், மற்றவர்களையும் தொடர்ந்து தொத்திக்கொள்ளும்.

முத்து : அப்படியானால், நான் இனிமேல் நீங்கள் சொன்னபடி தூய்மையான உணவு சாப்பிடுவேன். தெருவில் விற்கும் பண்டங்களை வாங்கிச் சாப்பிடாமல் ஒழுங்காய் இருப்பேன்.

புதிய சொற்கள்

அம்மை	இறக்கின்றனர்	காய்ச்சின
குத்துகிறவர்	புள்ளி புள்ளியாய்	காலரா
தொத்துநோய்	வடு	நெருங்கி
தீமைகள்	குருடு	டைபாயிடு
நேரிடும்	அழகு	சிரங்கு
சொறி	சுத்தமான	உணவு

பயிற்சி :

I. எதிர்ச் சொல் கூறு ?

சுத்தம், தீமை.

II. இந்தப் பாடத்தில் வந்துள்ள மூன்றுஎழுத்து வார்த்தை நான்கு எழுது ?

வினுக்கள் :

1. அம்மை எப்படிப்பட்ட நோய் ?
2. அம்மை குத்திக்கொள்ளுதல் எதற்கு நல்லது ?
3. தொத்துநோய் வராமல் இருக்க நாம் என்ன செய்யவேண்டும் ?

இலக்கணம்

இனிமேல் நடக்கப்போகும் செயலை உணர்த்தும் காலம் எதிர்காலம் எனப்படும். உதாரணமாக : "அப்படியே செய்வான்'', என்பதில் செய்வான் என்ற

சொல் இனிமேல் செய்யப்போவதைக் குறிப்பிடுவதால், இது எதிர்கால வினைச்சொல் என்று சொல்லப்படும்.

வருவான், உண்பாள், தருவார், காண்பான் என்ற சொற்கள் எதிர்காலத்தைக் குறிக்கும் வினைச் சொற்களாகும்.

---

18. பழமொழிகள்

மக்கள் முதலில் பேசக் கற்றுக்கொண்டனர்; பிறகு ஒவ்வொரு கருத்தையும் மனத்தில் பதியவைத்தனர். சிலர் தம் வாழ்க்கையில் நடந்தவைகளை ஏடுகளில் எழுதிவைத்தனர். சிலர் அழகான வார்த்தைகளால் பாட்டு போலக் கூறினார்கள். அவ்வாறு பழைய காலத்துப் பெரியோர் கூறிய மொழிகள் பழமொழிகள் எனப்பட்டன. அவை சிறந்த கருத்துக்களை உடையவை. கீழே சில பழமொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளைப்படித்து அறிந்து கொள்ளுங்கள்.

1. அகதிக்கு ஆண்டவன் துணை.
2. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொருதவன் போல்.
3. இக்கரை கண்ணுக்கு அக்கரை பச்சை.

4. ஈனரை அடுத்தால் மானம் அழியும்.
5. உடும்பு போனால் போகிறது, கை விட்டால் போதும்.
6. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே.
7. எடுப்பது பிச்சை; ஏறுவதோ பல்லக்கு.
8. ஏர் நடந்தால் பேர் நடக்கும்.
9. ஐயோ என்றால் ஆறு மாதத்துப் பாவம் சுற்றிக்கொள்ளும்.
10. ஒரு ஊரிலே இரண்டு பைத்தியக் காரர்கள்.
11. ஓடிப்போன முயல் பெரிய முயல்.
12. ஔவை வாக்கு அமுத வாக்கு.

புதிய சொற்கள்

கற்றுக்கொண்டு	பயக்கும்	பாவம்
கருத்து	நிகழ்ச்சி	சுற்றிக்கொள்ளும்
பதியவைத்தனர்	அகதி	பைத்தியக்காரர்
வாழ்க்கை	ஆக்க	அமுதம்
சுருங்கிய	பொருதவர்	வாக்கு
நாளடைவில்	உடும்பு	

பயிற்சி :

எதிர்ச் சொல் கூறு ?

சிலர், சுருங்கிய, போ, ஏறு.


வினக்கள் :

1. அகதிக்கு யார் துணே ?
2. ஊரைச் சொன்னுலும் எதைச் சொல்லக் கூடாது ?
3. ஏர் நடந்தால் எது நடக்கும் ?
4. எந்த முயல் பெரிய முயல் ?
5. யாருடைய வாக்கு அமுத வாக்கு ?

இலக்கணம்

கீழ்வரும் சொற்களில் முக்கால வினைச்சொற்களைப் பிரித்து எழுது? (இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்) படித்தான், வருவான், ஓடுகிருன், நின்ருன், வந்தது, எழுதுவார்.

19. கொடி வணக்கம்



அச்சம் போக்கும் கொடி இது
　　ஆண்மை நல்கும் கொடி இது ;
இச்செகத்து வாழ்வினை
　　இன்பமாக்கும் கொடி இது. 1.

சத்தியத்தின் கொடி இது
　　சக்தி தந்த கொடி இது
புத்தி மிக்க ஞானிகள்
　　பூஜை செய்த கொடி இது. 2.

சாதி பேதத் தீமையைச்
　　சாம்பலாக்கும் கொடி இது
நீதியான எதையுமே
　　நின்று காக்கும் கொடி இது. 3.

—நாமக்கல் கவிஞர், இராமலிங்கம் பிள்ளை.

அருஞ்சொற் பொருள் :

அச்சம் - பயம் ; ஆண்மை - வீரம் ; செகம் - உலகம் ; சத்தியம் - உண்மை ; ஞானிகள் - அறிவால் உயர்ந்தோர் ; தீமை - கொடுமை ; சாம்பல் ஆக்கும் - அழித்துவிடும்.

புதிய சொற்கள்

கொடி	சத்தியம்	சாதிப்பேதம்
அச்சம்	காக்கும்	தீமையை
ஆண்மை	ஞானிகள்	சாம்பலாக்கும்

வினுக்கள் :

1. நமது கொடி எப்படிப்பட்ட கொடி ?
2. புத்தி மிக்க ஞானிகள் எதைப் பூசை செய்தனர் ?
3. எது தீமை விளேவிப்பது ?
4. கொடி எதைச் சாம்பல் ஆக்கும் ?

---


20. இரவீந்திரநாத தாகூர்

1. தாகூர் என்பவர் நமது நாட்டில் இருந்த ஒரு பெரிய கவிஞர். அவர் வங்காளத்தில் பிறந்தவர். அவர் ஓர் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இளமையிலேயே ஆங்கிலம், வங்கம் என்ற இரு மொழிகளே- யும் அவர் நன்ருகக் கற்ருர்.

2. முதல் முதல், அவர் வங்க மொழியில் பல பாட்டுக்கள் பாடினுர் ; பிறகு அவை- களே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

அந்தப் பாடல்கள் படிப்பதற்கு மிகவும் அழகாய் இருக்கும்.

3. அவர் செய்த நூலின் பெயர் "கீதாஞ்சலி" என்பது. முதலில் அவர் அதை வங்க மொழியில் எழுதினார். அந்த நூலின் அழகைக் கண்டு உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் பாராட்டினர்.



4. அந்த நூலை எழுதியதற்காகத் தாகூருக்கு 'நோபெல் பரிசு' என்ற ஒரு பரிசு ஐரோப்பியரால் கொடுக்கப்பட்டது. அந்தப் பரிசின் தொகை ஒன்பதினாயிரம் பவுன்; அதாவது ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் ஆகும்.

5. இப்பொழுது கல்கத்தாவுக்கு அப்பால் நூறு மைல் தொலேவில் போல்பூர் என்னும் ஒரு சிறிய ஊர் இருக்கிறது. சிறுவர்கள் கற்பதற்காகத் தாகூர் அங்கு ஒரு கல்விச் சாலே ஏற்படுத்தியிருக்கிருர். அதற்குச் சாந்தி நிகேதனம் என்பது பெயர். அந்தப் பள்ளிக்கூடத்தில் வகுப்புக்கள், மரங்களின் அடியிலும், வெட்டவெளிகளிலுமே நடக்கின்றன. அங்கு மாணுக்கர் சாதிமத வேறுபாடு இல்லாமல் வாழ்கின்றனர். மாணுக்கர்களும் ஆசிரியர்களும் அங்கே ஒன்ருகக்கூடி ஒரே இடத்தில் வாழ்கின்ருர்கள்.

6. இரவீந்திரநாத தாகூர் என்பது அவருடைய முழுப் பெயர். அவர் நம் நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட பெரிய தலேவர். அவருடைய புகழ் நம் நாட்டில் என்றும் நிலேத்து நிற்கும்.

புதிய சொற்கள்

தாகூர்	மொழிகளேயும்	ஐரோப்பியர்
மாணுக்கர்	கல்கத்தா	கவிஞர்
தொகை	மொழிபெயர்த்தல்	போல்பூர்
குடியிருக்க	வங்காளம்	கீதாஞ்சலி
கல்விச் சாலே	ஒன்பதிஞயிரம்	பெரியாருள்
உயர்ந்த	பாராட்டினர்	பவுன்
ஆங்கிலம்	சாந்திநிகேதனம்	வெட்டவெளி
இலட்சம்	நோபெல் பரிசு	வங்கம்

பயிற்சி :

கோடிட்ட இடங்களை நிரப்பு?

i. தாகூர் —— என்ற இருமொழிகளைக் கற்ருர்.

ii. அவர் செய்த நூலின் பெயர் ——.

iii. அவருக்கு —— பரிசு கிடைத்தது.

வினுக்கள் :

1. தாகூர் எந்த நாட்டில் பிறந்தார்?
2. தாகூர் பாடலுக்கு என்ன பரிசு அளிக்கப் பட்டது?
3. தாகூர் பாடிய நூலின் பெயர் என்ன?
4. அவர் ஏற்படுத்திய கல்விச்சாலையின் பெயர் என்ன?
5. தாகூரின் முழுப் பெயர் யாது?

இலக்கணம்

ஆசிரியர் கந்தனிடம், "நான் வருகிறேன்; நீ அவனிடம் சொல்" என்று கூறினுர். இச்சொற்ருெடரைப் பார். இதில், ஆசிரியர் கூறியது "......" இவ் வடையாளமிட்ட குறிக்குள் அடங்கியுள்ளது. இவ்வாறு ஒருவர் கூறிய வார்த்தையை மாற்ருமல் அப்படியே எழுதவேண்டுமானுல், இந்தக் குறிக்குள் எழுத வேண்டும். இதற்கு மேற்கோள் குறி என்பது பெயர்.

21. தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்திபிறக்குது மூச்சினிலே 1.

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—என
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு 2.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவஞ்செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு 3.

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. 4.

—தேசீய கவி, சுப்பிரமணிய பாரதியார்.

அருஞ்சொற் பொருள் :

சக்தி - வலிமை ; பொருனை - தாமிரவருணி ; திரு மேனி - உடல் ; நித்தம் - தினமும் ; வடமாலவன் குன்றம் - திருவேங்கடம் என்னும் திருப்பதி ; மண்டி - பெருகி நிற்கும் ; பார் - பூமி.

புதிய சொற்கள்

பாயுது	பொருனை	குமரி
பிறக்குது	திருமேனி	எல்லை
காவிரி	செழித்த	மாலவன்
தென்பெண்ணை	திரை	குன்றம்
பாலாறு	நித்தம்	மண்டி
வையை	தவம்	கிடக்கும்
கம்பன்	சாத்திரம்	

வினாக்கள் :

1. செந்தமிழ் நாடென்னும்போது எது காதில் பாய்கிறது ?
2. தந்தையர் நாடென்னும்போது எது பிறக்கிறது ?
3. தமிழ் நாட்டில் ஓடும் ஆறுகள் யாவை ?
4. குமரி எல்லை எங்கிருக்கிறது ?
5. மாலவன் குன்றம் எது ? எங்கே இருக்கிறது ?
6. தமிழ் நாடு எதில் சிறந்தது ?
7. தமிழ் நாடெங்கும் எதன் மணம் வீசுகிறது ?

22. நோயற்ற வாழ்க்கை


1. இந்த உலகத்தில் மக்கள் எல்லோரும் நோய் இல்லாமல் இருக்க விரும்புகிருர்கள். ஏன்? நோய் இருந்தால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. நல்ல உடம்பு இருந்தால்தான் எல்லாச் செல்வங்களையும் தேடவும், அனுபவிக்கவும் முடியும். நோய் உள்ளவனுக்கு வாழ்க்கையே துன்பமாக இருக்கும்.

2. ஆதலால் எல்லோரும் நோய் இல்லாமல் நலத்தோடு இருக்கவேண்டும். நோய் இல்லாத வாழ்க்கைதான் ஒருவருக்கு மேலான செல்வம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஒரு சிறந்த பழமொழி. நோயில்லாமல் வாழ்வதற்காகச் சில ஒழுங்கு முறைகளை இளமையிலிருந்தே நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

3. நீ நாள்தோறும் விடியற்காலையில் எழுந்திருக்கவேண்டும். எழுந்தவுடன் கடவுளை வணங்கவேண்டும். உடனே நன்ருகப் பல் விளக்கவேண்டும். வாயின் மூலமாகத் தான் பல நோய்களும் உடலுக்கு வருவதாக மருத்துவர்கள் சொல்லுகின்ருர்கள். பற்கள்

வெண்மையாகவும் அழுக்கு இல்லாமலும் இருக்கவேண்டும்.

4. உனது உடலையும் ஆடையையும் நன்ருகச் சுத்தம் செய்யவேண்டும். "கூழாணுலும் குளித்துக் குடி; கந்தையாணுலும் கசக்கிக் கட்டு" என்பவை சிறந்த பழமொழிகள்.



5. மாலைப் பொழுதில் நன்ருக உடற்பயிற்சி செய்யவேண்டும். உடற்பயிற்சியை நல்ல காற்று உள்ள இடங்களில் செய்யவேண்டும். உடலுக்கு நன்ருகப் பயிற்சி கொடுத்தால்தான் பசி நன்ருக உண்டாகும்.

உணவைக் குறிப்பிட்ட நேரத்தில் நன்றாக மென்று உண்ணவேண்டும்.

6. இரவில் மூன் நேரத்தில், மறுநாள் பாடங்களைப் படிக்கவேண்டும். படித்த பிறகு ஒன்பது அல்லது பத்து மணிக்குள் படுத்துக் கொள்ளவேண்டும். இரவில் நீண்ட நேரம் விழித்திருக்கக் கூடாது.

7. நீ படுக்கும் அறையிலுள்ள சன்னல்களை நன்றாகத் திறந்து வைத்துவிட்டுப் படுத்தல் நல்லது. அப்போதுதான் காற்றோட்டமும் இருக்கும்; தூய காற்றையும் நீ உட்கொள்வாய். அப்படியல்லாமல் அறையை மூடி வைத்துவிட்டு உறங்கினால், உடலுக்குக் கெடுதி ஏற்படும். இவ்வாறெல்லாம் நீ செய்து வந்தால் உன்னை நோய்கள் அணுகமாட்டா. நீ உடல் நலத்தோடு வாழலாம்.

புதிய சொற்கள்

மக்கள்	உலகத்தில்	நோய்
எல்லோரும்	நோயற்ற	குறைவற்ற
வாழ்க்கை	செல்வம்	வாழ்வு
ஒழுங்குமுறை	நலத்தோடு	துன்பம்
இளமையில்	மருத்துவர்	குளித்து
விடியற்காலை	உடற்பயிற்சி	வெண்மை
கூழானாலும்	காற்றோட்டம்	எழுத்து
அணுகமாட்டா	விளக்க	உறங்கி
தெரிந்து	மூலமாக	கூசக்கி

வினுக்கள் :

1. நாள்தோறும் எப்பொழுது எழுந்திருக்க வேண்டும் ?
2. பற்களை எவ்வாறு வைத்துக்கொள்ள வேண்டும் ?
3. உடற்பயிற்சி செய்வதால் என்ன நன்மைகள் ஏற்படும் ?
4. படுக்கும் அறையை எவ்வாறு வைத்திருக்க வேண்டும் ?

இலக்கணம்


இப்பாடத்திலிருந்து இறந்த காலம், நிகழ்காலம் எதிர்காலம் ஆகியவைகளுக்குரிய சொற்களை வகைக்கு நான்கு எடுத்து எழுது ?

---

23. குரங்குக் கூட்டம்

குரங்குக் கூட்டம் பார்த்திடுவாய்
குதித்து ஆடல் பார்த்திடுவாய் ;
சிரங்கு வந்த பையனைப்போல்
சொறியும் கைகள் பார்த்திடுவாய். 1.

குட்டி சுமக்குது ஓர் குரங்கு ;
"குர் குர்" என்குது ஓர் குரங்கு.
தட்டிக் கொடுக்குது ஓர் குரங்கு ;
தாவிக் குதிக்குது ஓர் குரங்கு. 2.



கட்டிப் பிடிக்குது ஓர்குரங்கு,
கர்ணம் போடுது ஓர்குரங்கு;
எட்டிக் கிளையைப் பிடித்திடவே
எம்பிக் குதிக்குது ஓர்குரங்கு. 3.

கிளையில் காலையே மாட்டிவிட்டுக்
கீழே தொங்குது ஓர்குரங்கு;
தழையும் பழமும் பறித்தெங்கள்
தலையில் போடுது ஓர்குரங்கு. 4.

துட்டத்தனங்கள் மிக்கதுவாம்
துன்பம் பலவும் தந்திடுமாம்;
கட்டம் விளைப்பது; ஆனாலும்
கல்லால் அடித்திடலாமோ சொல்? 5.

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா.

அருஞ்சொற் பொருள் :

கர்ணம்—குட்டிக்கரணம்; எம்பி—மேலே எழும்பி; துட்டத்தனம்—சேட்டை.

புதிய சொற்கள்

குதித்து	தாவி	எம்பி	தட்டி
சிரங்கு	கட்டி	மாட்டி	கிளையை
தொங்குது	பிடிக்குது	சொறியும்	போடுது
துட்டத்தனம்	தழையும்	சுமக்குது	கர்ணம்
குர்குர்	எட்டி	பறித்து	கட்டம்

விஞக்கள் :

1. குரங்கின் கைகள் எவ்வாறு காணப்படு கின்றன ?
2. குரங்குகள் ஒவ்வொன்றும் என்ன செய் கின்றது ?
3. ஒரு குரங்கு எவ்வாறு கீழே தொங்குகிறது ?
4. ஏன் குரங்குகளைக் கல்லால் அடிக்கக் கூடாது ?

---

24. விழித்த பலன்

1, ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் விடியற்காலையில் எழுந்து சன்னல் வழியாகத் தெருவில் எட்டிப் பார்த்தான். அப்போது தெருவில் படுத்துக்கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரனும் விழித்து எழுந்தான். எழுந்தவுடன் அரண்மனை மேல்மாடியில் நின்றுகொண்டிருந்த அரசனைப் பார்த்தான்.

2. உடனே அரசன் பிச்சைக்காரனுடைய கண்ணில் படாமல் இருப்பதற்காகத் தன் தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டான். விரைவாக இழுத்துக் கொள்ளும்போது சன்னல் சட்டம் அவன்

தலையில் இடித்தது. அதனால் சிறிது காயம் உண்டாகி இரத்தமும் வந்தது. "காலையில் எழுந்து இந்தப் பிச்சைக்காரன் முகத்தில் விழித்ததால் அன்றோ, என் தலையில் காயம் பட்டது. இப்படியே நாள்தோறும் இவன் முகத்தில் விழிப்பவர்களுக்கெல்லாம் என்ன தீமை உண்டாகுமோ?'' என்று தனக்குள் எண்ணினான்.



3. பிறகு அரசன் பின்னும் யோசனை செய்தான்; "பலர் துன்பங்களுக்கும் காரண மாய் இருக்கும் இவனை உயிருடன் வைக்கக் கூடாது. இவன் தலையை வெட்டிவிட வேண்டும்,'' என்று முடிவு செய்தான்.

4. உடனே, அரசன் தன் கொலையாளி களைக்கூப்பிட்டு, "இந்தப் பிச்சைக்காரனைக் கொண்டுபோய்த் தலையை வெட்டிவிடுங்-கள்," என்று கட்டளை இட்டான். கொலை யாளிகள் பிச்சைக்காரனிடம் சென்று அரசன் கட்டளையைத் தெரிவித்து, தங்களுடன் வரும்படி அவனை அழைத்தார்கள். அது கேட்ட அந்த ஏழை, தான் அரசனைக் கண்டு ஒரு வார்த்தை பேசிவிட்டு வந்த பிறகு, தன்னை வெட்டும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

5. கொலையாளிகள் அவன் விருப்பப் படியே அவனை அரசனிடம் அழைத்துச் சென்றார்கள். ஏழை, அரசனைப் பார்த்து, "அரசே, ஏழையாகிய என் முகத்தில் விழித்ததால் உங்களுக்குச் சிறிது காயம் பட்டது என்று எண்ணி என் தலையை வெட்டச் சொல்லுகிறீர்கள். தூங்கி எழுந்ததும் உங்கள் முகத்தைப் பார்த்த எனக்குத் தலையே போய்விடும்படியான துன்பம் நேரிட்டதே! அதற்குத் தீர்ப்பு என்ன என் பதைச் சொல்லிவிட்டுப் பின்பு என் தலையை வெட்டிவிடுங்கள்," என்று கேட்டுக்கொண் டான்.

6. இதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு, மிகவும் வெட்கமடைந்தான். ஏழையின் அறிவையும் பாராட்டினன். அவனை அழைத்-துத் தன் அரண்மனையிலேயே வைத்து அவனுக்கு எல்லாவிதப் படிப்பும் கற்றுக் கொடுக்கச் செய்தான். பின்பு அவனைத் தன் அமைச்சனுகவும் அமர்த்திக் கொண்டான். அறிவு உடையவர்க்கு எல்லா நன்மைகளும் உண்டாகும் அன்றோ ?

புதிய சொற்கள்

விடியற்காலை	சட்டம்	துன்பம்
அமைச்சனுக	அப்போது	கெஞ்சி
ஏழையாகிய	இடித்தது	ஆளாய்
பிச்சைக்காரன்	எழுந்தான்	அழைத்து
வெட்டிவிட	விழிப்பவர்	பார்த்த
முடிவுசெய்தான்	நேரிட்டதே	பின்னும்
போய்விடும்	நாள்தோறும்	உள்ளுக்கு
கொலையாளி	திடுக்கிட்டு	காயம்
கட்டளையை	யோசனை	வெட்கம்
மெச்சினன்		

பயிற்சி :

I. கோடிட்ட இடங்களை நிரப்பு ?

(i) அரசன் தன் ——உள்ளுக்கு——கொண்டான்.

(ii) இவன்——வெட்டிவிட——.

II. பொருள் கூறு ?

சட்டம், எண்ணி, கண்டு, காயம்.

வினுக்கள் :

1. அரசனுக்குத் தலையில் எதனுல் காயம் பட்டது ?
2. அரசன் அதற்கு நினைத்த காரணம் யாது ?
3. பிச்சைக்காரன் அரசனிடம் என்ன கூறினுன்?
4. அரசன் அவனுக்கு என்ன உதவி செய்தான் ?
5. இக்கதையால் நீங்கள் தெரிந்து கொள்வது என்ன ?

இலக்கணம்

கீழ்வரும் சொற்களில் பெயர்ச் சொல் எது. வினைச் சொல் எது என்று குறிப்பிடு ?

ஊர், இருந்தான், எழுந்து, அரசன், பண்டங்கள், கண்டான், தலை, எண்ணினுன், ஏழை, முகம்.

---

25. எழுவாய் - பயனிலை - செயப்படு பொருள்

(உரையாடல்)

சாந்தி : இன்றைக்கு என் ஆசிரியர் புதிய பாடம் ஒன்று கற்றுக்கொடுத்தார்.

காந்தி : அப்படியா, சாந்தி ! அவர் என்ன கற்றுக்கொடுத்தார், சொல் பார்ப்போம்.

சாந்தி : முதலில் எழுவாய் என்பதை விளக்கினுர்.

காந்தி: எழுவாய் என்ருல் என்ன ?

சாந்தி: "அவள் வந்தாள்" என்ற வாக்கியத்தை எடுத்துக்கொள். அதில் வந்தாள் என்பது வினைச் சொல் அல்லவா ? வினை என்பதே தொழில்; ஆகையால் தொழிலைச் செய்யும் பொருள் எதுவோ, அதுவே எழுவாய். இங்கு, வந்தாள் என்பது தொழில்; அத்தொழிலைச் செய்பவள் யார்?. அவள் அல்லவா ? ஆகையால் அவள் என்பது எழுவாய்.

காந்தி: புரிந்தது; இப்பொழுது "நளன் சென்ருன்" என்பதில் நளன் எழுவாய் அல்லவா ?

சாந்தி: ஆம்; நளன் என்பதே எழுவாய்.

காந்தி: அடுத்தது என்ன கற்றுக் கொடுத்தார் ?

சாந்தி: இரண்டாவதாக, பயனிலை என்பதை விளக்கினுர்.

காந்தி: பயனிலை என்பது என்ன ?

சாந்தி: "அவள் வந்தாள்" என்பதில் அவள் எழுவாய் அல்லவா ? பயனிலை என்பது எழுவாயின் தொழிலைக் காட்டு கிறது; மற்றும் அது கருத்தை முடித்து

நிற்கிறது. வந்தாள் என்பது அவள் என்ற எழுவாயின் தொழிலைக் காட்டுகிறது ; மற்றும் அது கருத்தை முடித்து நிற்கிறது. அதனால் வந்தாள் என்பது பயனிலை.

காந்தி : "திருமதி சென்றாள்," "சுந்தரி நடந்தாள்" என்ற வாக்கியங்களில் சென்றாள், நடந்தாள் என்பன பயனிலைகள் அல்லவா ?

சாந்தி : ஆம். சென்றாள், நடந்தாள் என்பன பயனிலைகளே.

காந்தி : மூன்றாவது என்ன சொல்லிக் கொடுத்தார் ?

சாந்தி : செயப்படுபொருள் என்ன என்பதை விளக்கினார்.

காந்தி : செயப்படுபொருள் என்பது என்ன ?

சாந்தி : செயப்படுபொருள் என்பது எழுவாயினால் செய்யப்பட்ட பொருள் அல்லது செயலைத் தெரிவிப்பதாகும். "கண்ணன் புத்தகத்தைப் படித்தான்" என்பதில் கண்ணன் எழுவாய்; படித்தான் என்பது பயனிலை. எதைப் படித்தான் என்ற கேள்வி கேட்டால், "புத்தகத்தை" என்று பதில் கிடைக்கும்.

அதனுல் புத்தகத்தை என்பது செயப்படு பொருள் ஆகும்.

காந்தி : "நான் பழத்தைத் தின்றேன்" என்பதில் நான் எழுவாய்; தின்றேன் பயனிலை; பழத்தை செயப்படு பொருள் அல்லவா?

சாந்தி : யாரை, எதை, எவற்றை என்னும் சொற்களை வினையோடு சேர்த்துக் கேட்கும்பொழுது, அதற்குக் கிடைக்கும் பதிலே செயப்படுபொருளாகும்.

காந்தி : இன்று வாக்கியத்தின் உறுப்புக்களைத் தெரிந்துகொண்டேன். சாந்தி, உனக்கு மிக்க நன்றி கூறுகிறேன். வணக்கம்.

புதிய சொற்கள்

எடுத்துக்கொள்	நளன்	புதிய
தின்றேன்	சாந்தி	சுந்தரி
செயப்படுபொருள்	வினைச்சொல்	அடுத்து
யாரை	செய்யும்	காந்தி
பயனிலை	பயனை	எதை
காட்டுகிறது	செய்பவன்	எழுவாய்
தெரிவிப்பது	எவற்றை	விளக்கினுர்
அல்லவா	படித்தான்	கருத்தை
கிடைக்கும்	ஆகையால்	என்ருல்
கண்ணன்	அதற்கு	முடித்து
வாக்கியம்	புரிந்தது	திருமதி
பதில்	நன்றி	

பயிற்சி :

கீழ்க்கண்ட வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுப்பொருளை எடுத்து எழுது?


1. கந்தன் மிட்டாய் வாங்கினான்.
2. நான் பழத்தைத் தின்றேன்.
3. சுந்தரி துணிகளைத் தைத்தாள்.
4. உடற்பயிற்சி உடலுக்கு உறுதி.

வினாக்கள் :

1. எழுவாய் எனப்படுவது யாது?
2. பயனிலை எனப்படுவது யாது?
3. செயப்படுபொருள் எனப்படுவது யாது?

---

26. குரங்காட்டி



1. குரங்கு மிகவும் அறிவுள்ள விலங்கு. நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் பார்த்து, அதுவும் அப்படியே செய்யும்.

2. சர்க்கசு முதலியவற்றில் குரங்குகள் சைகிள் விடுவதை நீங்கள் பார்த்திருக்-

கின்றீர்களா ? அதைப்போலவே குரங்காட்டி யும் அதைப் பிடித்துப் பழக்கிவிடுகிருன். படத்தில் உள்ளவன் ஒரு குரங்காட்டி. இவனை நீங்கள் பலமுறை பார்த்திருக்கலாம்.

3. இந்தக் குரங்காட்டி, தன் குரங்கு களுக்கு ஆடை உடுத்துவான்; குரங்கின் கையில் ஒரு கொட்டாங்கச்சியைக் கொடுப் பான். குரங்கு அதைக் தன் தலையில் தூக்கி வைத்துக்கொள்ளும். அதைக் 'குளத்துக்குப் போய்த் தண்ணீர் கொண்டுவா,' என்பான். அது போக விரும்பாததுபோல முகத்தைச் சுளிக்கும். "கணவன் அடித்தானு?" என்பான். அப்போது அது தேம்பித் தேம்பி அழுவது போலப் பாசாங்கு செய்யும். 'அழாதே! நீ தாய் வீட்டுக்குப் போகிருயா ?' என்பான். உடனே அது வேகமாய் ஓடும். குரங்கைச் 'சலாம் செய்' என்ருல், அது உடனே சலாம் செய்யும்.

4. இவ்வாறு வேடிக்கையாகச் சிறு-வர்களை மகிழச் செய்ய, இவன் விளை யாட்டுக் காட்டுவான்; பிறகு தன் கையில் ஒரு கொம்பைப் பிடித்துக்கொண்டு ஆட்டு-வான். உடனே அதுவும் ஆடத் தொடங்கி, நடனமாடும். தன் கையிலுள்ள கழியைக்

குறுக்காகப் பிடித்து, 'இலங்கா பட்டணம் தாவு' என்பான். அதுவும் கழியின்மேல் எழும்பித் தாண்டும்.

5. இவ்விதம் பல வேடிக்கைகளை இவன் சிறுவர் சிறுமியர்களுக்குக் காட்டி, அரிசி, துணி முதலியவைகளை வாங்கிக் கொண்டு போவான்.

6. 'கோல் ஆடினால் குரங்கு ஆடும்,' என்ற பழமொழி குரங்கைப்பற்றி எழுந்த தாகும்.

புதிய சொற்கள்

மிகவும்	குளத்துக்கு	கொட்டாங்கச்சி
விலங்கு	விரும்பாதது	தேம்பித் தேம்பி
பிச்சை	பாசாங்கு	குறுக்காக
வைத்து	சலாம்	இலங்கா
வேடிக்கை	இவ்வாறு	பட்டணம்
சர்க்கசு	கொம்பை	கழியின்மேல்
உடுத்து	பிடித்து	எழும்பி
தூக்கி	ஆட்டுவான்	தாண்டும்
வைத்து	நடனம்	பாம்பாட்டி

பயிற்சி :

I. தலை, தழை, கழி, கனி இவைகளைப் படித்துப் பொருள் தெரிந்து கொள் ?

II. நடனம் + ஆடும் = நடனமாடும். இதுபோல் கீழுள்ளவற்றைப் பிரித்துக்காட்டு ?

பாம்பாட்டி, குரங்காட்டி, அறிவுள்ள, கையிலுள்ள.

வினுக்கள் :

1. குரங்கு எப்படிப்பட்ட விலங்கு ?
2. சர்க்கசில் குரங்குகள் என்ன செய்யும் ?
3. குரங்குகள் என்ன என்ன விளையாட்டுகள் காட்டும் ?
4. குரங்கைப் பற்றிய பழமொழி ஒன்று கூறு ?

இலக்கணம்

1. குரங்காட்டி ஆடை உடுத்துவான்.
2. குரங்கு முகத்தைச் சுளிக்கும்.
3. அவன் வேடிக்கை காட்டுவான்.

இவ்வாக்கியங்களில் வந்துள்ள எழுவாய் பயனிலைகளை மட்டும் எழுது ?

---

27. குமணன்—1

(நாடகம்)

காட்சி 1

(குமணன் என்னும் அரசன், இரப்பவர்களுக்கு இல்லை என்னுமல் கொடுக்கும் ஒரு கொடையாளி. அவன் தன் தம்பி அமணனிடம் நாட்டை ஒப்பித்துவிட்டுக் காட்டில் வசிக்கிருன். அமணன் பேராசையால் குமணனைக் கொன்றுவிட எண்ணினன். குமணன் தலையை வெட்டிக் கொண்டு

வருபவருக்குப் பெரும் பொருள் பரிசு அளிப்பதாக வெளியிட்டான். (குமணனிடம் பெருந்தலைச் சாத்தனுர் என்னும் புலவர் போகிருர்.)



குமணன்: ஐயா, வாரும். எதற்காக இவ்வளவு தூரம் காட்டில் என்னைத் தேடிக் கொண்டு வந்தீர்?

பெரு. சா.: அரசரே, நீர் ஒரு பெருங் கொடையாளர் என்பதைக் கேள்விப் பட்டேன்.

கும: நான் இப்போது அரசன் அல்லேன்; என் தம்பி அமணனே அரசன்.

பெரு. சா.: அதைப்பற்றி என்ன? நான் வறுமையால் மிகவும் வருந்துகிறேன். நான் உணவு உட்கொண்டு இரண்டு



நாட்களாயின. என் மனைவியும் மக்களும் பட்டினி கிடக்கிறார்கள்.

குமண: புலவரே, உம்மைப் பார்க்கும்போதே என் மனம் உருகுகிறது. நான் என்ன செய்வேன்? நான் மன்னனாக நாட்டில் இருந்த அந்தக் காலத்தில் நீர் வரவில்லை. இப்போது வந்தீர். நான் இப்போது உமது வறுமையை எவ்வாறு போக்குவேன்? (தேம்பி அழுகிறான்.)

பெரு. சா.: அரசரே, வருந்தாதீர்!

குமண: சரி, என் தலையைக் கொண்டுபோய்க் கொடுப்பவருக்கு என் தம்பி பெரும் பொருள் கொடுப்பதாகக் கூறியிருக்கிறானும். இதோ, என் உடைவாள்! என் தலையை வெட்டிக் கொண்டுபோய் அவனிடம் கொடும். அவன் கொடுக்கும் பொருளைப் பெற்று உமது வறுமையை நீக்கிக்கொள்ளும். (உடைவாளைக் கொடுக்கிறான்.)

பெ. சா.: (கையில் உடைவாளை வாங்கிக் கொண்டு) வேண்டா, அரசரே! நான் வேண்டும்போது தலையை வாங்கிக் கொள்கிறேன். நான் இப்போது விடை பெற்றுக் கொண்டு போகிறேன். (போகிறார்.)

புதிய சொற்கள்

குமணன்	அல்லேன்	வருந்துகிறேன்
இரப்பவர்	வறுமையால்	கொடையாளர்
அமணன்	மனைவி	உடைவாள்
ஒப்புவித்து	மக்கள்	வரவில்லை
பேராசை	உட்கொண்டு	வெட்டி
கொன்றுவிட	வருகிறது	வேண்டும்போது
பெருந்தலை	ஏராளமாக	விடைபெற்று
சாத்தனார்	அந்தக்காலம்	கொண்டுபோய்
நீக்கி		

வினாக்கள் :

1. குமணன் எப்படிப்பட்ட கொடையாளி?
2. அமணன் யாருக்கு பரிசு அளிப்பதாகக் கூறினான்?
3. சாத்தனார் குமணனிடத்தில் ஏன் சென்றார்?
4. சாத்தனாரைக் கண்டு குமணன் என்ன சொல்லி வருந்தினான்?
5. சாத்தனாருக்கு குமணன் கொடுத்தது என்ன?
6. சாத்தனார் என்ன பதில் கூறினார்?

இலக்கணம்

1. நான் வறுமையால் வருந்துகிறேன்.
2. மனம் உருகுகிறது.
3. தம்பி கூறியிருக்கிறான்.

இவ்வாக்கியங்களில் வந்துள்ள எழுவாய், பயனிலைகளை எடுத்து எழுது?

28. குமணன்—II

(நாடகம்)

காட்சி—2

(சாத்தனார் வாளைத் தண்டினால் குமணன் தலையைப்போல் ஒரு தலை செய்து கொண்டு ஒரு தட்டில் வைத்து, அதனை ஒரு துணியால் மூடிக்கொண்டு, அமணன் இருந்த அரண்மனைக்குப் போய்க் காட்டுகிறார்.)

அமணன் : புலவரே, இது என்ன?

பெ. சா. : இது உம் அண்ணனுடைய தலை, தெரியவில்லையா? நீர் கூறியபடி பெரும் பொருள் கொடும்.

அம : உண்மையா? தன்னிடம் பணம் இருந்தபோது அதைப் புலவர்களுக்குக் கொடுத்து அழித்தார் என்றே நான் இதுவரையில் நினைத்தேன்! தன் தலையைக் கூடவா புலவருக்கு கொடுத்தார்? ஐயோ, என் அண்ணன் பெருமையை நான் அறியவில்லையே! நான் பெரிய பாவியாய் விட்டேனே!

(அழுகிறான்.)

பெ. சா. : குமணர் இதுவரையிலும் ஒன்றையும் புலவருக்குக் கொடுக்க மறுத்த

தில்லை. உமக்குச் சந்தேகமானால், இதோ அவரது உடைவாளும் இருக்கிறது பாரும்.

அம : சாத்தனாரே, என் அண்ணன் தலையை வெட்டிய வாளால் என் தலையையும் வெட்டிவிடும். என் அண்ணன் இறந்த பிறகு, நான் உயிருடன் இருக்கமாட்டேன். (அழுகிறான்.)

பெ. சா. : அமணரே, வருந்தாதீர். உம் மனத்தைச் சோதிக்கவே நான் இப்படிச் செய்தேன். இது உம் அண்ணன் தலை அன்று.

அம : புலவரே, நீர் பொய் பேசுகிறீர். நான் நம்பமாட்டேன்.

பெ. சா. : இது குமணர் தலையைப் போலச் செய்யப்பட்ட ஒரு போலித் தலை. குமணர் உயிருடன் இருக்கிறார்.

அம : அப்படியா? இதோ உம்முடன் நான் வருகிறேன். எனக்கு என் அண்ணனைத் தயைசெய்து காட்டும். (புலவர் அமணனை அழைத்துச் சென்று குமணனைக் காட்டுகிறார்.)

அம : அண்ணா, மன்னிக்கவேண்டும். என் தவறுகளைப் பொறுத்துக்கொண்டு என்னுடன் நாட்டுக்கு வரவேண்டும். (காலில் விழுந்து வணங்குகிறான்.)

குமணன் : தம்பி, அழாதே. தவறு செய்தல் எல்லோர்க்கும் இயல்புதானே ? உன் விருப்பப்படியே இதோ வருகிறேன். (நாட்டுக்குச் சென்று மறுபடியும் அரசாட்சியை ஏற்றுக்கொள்கிருர்.)

புதிய சொற்கள்

கிழங்கு	சந்தேகம்	நம்பமாட்டேன்
அரண்மனை	வருந்தாதீர்	பொறுத்து
கூறியபடி	பொய்	நாட்டுக்கு
அழித்தான்	போலித்தலை	விழுந்து
பெருமையை	தயைசெய்து	வணங்குகிருர்
பாவியாய்	மன்னிக்க	இயல்பு
மறந்ததில்லை	தவறுகளை	

வினக்கள் :

1. புலவர் காட்டிலிருந்து திரும்பி வந்து அமணனிடம் என்ன கூறினுர் ?
2. புலவர் வைத்திருந்த தலை எதனுல் செய்யப்பட்டது ?
3. தலையைக் கண்டதும் அமணன் என்ன சொல்லி வருந்தினுன் ?
4. புலவர் அமணனை எவ்வாறு தேற்றினுர் ?
5. அமணன் காட்டிற்குச் சென்று என்ன கூறினுன் ?
6. குமணனிடம் இருந்த நல்ல குணங்கள் எவை?

29. கடிதம்

1. சிறுவர்களே, 'கடிதம் எப்படி எழுதத் தொடங்கவேண்டும். எப்படி எழுதி முடிக்கவேண்டும்?' என்பவைகளை இன்று தெரிந்துகொள்ளுங்கள்.

2. கடிதம் எழுதுவதற்கு பயன்படும் காகிதத்தின் தலைப்பில் வலது பக்கத்தில் நீங்கள் இருக்கும் ஊரின் பெயரும், எழுதும் தேதியும் முதலில் எழுதவேண்டும்.

3. பிறகு, பொருளை எழுதத் தொடங்குவதற்கு முன் நீங்கள் யாருக்குக் கடிதம் எழுதுகிறீர்களோ அவர்களுக்கு உங்கள் வணக்கத்தைத் தெரிவிக்கவேண்டும். அதன் பின் எழுத விரும்பிய பொருளை எழுத வேண்டும். எழுதி முடித்தபிறகு, உங்கள் பெயரை முடிவில் எழுதவேண்டும்.

4. இப்படி எழுதிய பிறகு, அக் கடிதத்தை மடித்து உறையினுள் வைத்து அந்த உறையை மூடி, ஒட்டவேண்டும். உறையின்மேல் யாருக்கு எழுதுகிறீர்களோ அவர்களுடைய முகவரியை எழுதவேண்டும். அதன் பின்பே தபால் பில்லை ஒட்டித் தபாற் பெட்டியில் போடவேண்டும்.

5. அடியில் மாதிரிக் கடிதம் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அக்கடிதத்தைப் படித்துப் பார்த்து நீங்கள் கடிதம் எழுத-வேண்டிய முறைகளைத் தெரிந்துகொள்-ளுங்கள்.

சிதம்பரனர் தெரு,
திண்டிவனம்.
24—1—63.

அன்புள்ள தந்தையர் அவர்களுக்கு எழுதியது. வணக்கம். நான் நேற்று இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு இன்று காலை நலமே இவ்விடம் வந்து சேர்ந்தேன். இங்கு மாமா முதல் யாவரும் நலத்துடன் இருக்கிருர்கள். தாங்கள் சொல்லியனுப்பியபடி வெய்யிலில் அலையாமல் ஒழுங்காய் இருப்பேன். இங்கு வீட்டில் உள்ளவர்கள் யாவரும் என்னைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். விடுமுறை முடிந்ததும் நான் புறப்பட்டு அவ்விடம் வருகிறேன். அம்மாவுக்கும் என் வணக்கம் தெரிவியுங்கள்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மகன்,
வி. சுந்தரமூர்த்தி.

முகவரி :

திருவாளர் கந்தசாமிப் பிள்ளை அவர்களுக்கு,
141, தங்கசாலைத் தெரு,
சென்னை - 1.

புதிய சொற்கள்

சிறுவர்களே	மாதிரி	உறையினுள்
விடுமுறை	தொடங்க	முகவரி
காலங்களில்	தலைப்பில்	தபால்பில்லை
நலனைப்பற்றி	வலப்பக்கம்	அலையாமல்
கடிதம்	தேதி	நலமே
படிப்பதற்கு	வீண்பொழுது	

வினாக்கள் :

1. கடிதத்தை எவ்வாறு தொடங்கவேண்டும் ?
2. கடிதத்தை எப்படி முடிக்கவேண்டும் ?
3. முகவரி எவ்வாறு எழுதப்படவேண்டும் ?

இலக்கணம்

இப்பாடத்தில் உள்ள காற்புள்ளிகளையும் முற்றுப் புள்ளிகளையும் கவனி ?

---

1. வெற்றி வேற்கை

1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
2. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
3. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்
வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.
4. பெரியோரெல்லாம் பெரியருமல்லர்.
சிறியோரெல்லாம் சிறியருமல்லர்.
5. அடினும் ஆவின்பால் தன் சுவைகுன்றாது.
சுடினும் செம்பொன் தன் ஒளி கெடாது.
6. சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே.

7. சிறியோர் பெரும் பிழை செய்தாராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

8. நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை.
நீர்க்குட் பாசிபோல் வேர்க் கொள்ளாதே.

9. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

10. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே.

11. எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்ருேரை மேல் வருக என்பர்.

12. யானைக்கில்லை தானமும் தருமமும்
பூனைக்கில்லை தவமும் தயையும்.

13. நாளுங்கிழமையும் நலிந்தோர்க்கில்லை
கேளும் கிளையும் கெட்டோர்க்கில்லை.

14. கெடுங்கோல் மன்னர் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே.

15. தன் ஆயுதமும் தன் கையிற் பொருளும்
பிறன் கையிற்கொடுக்கும் பேதையும் பதரே.

அருஞ்சொற்பொருள் :

1. கசடு-குற்றம்.
2. தந்திரி-சேனை உடையவன் ; தறுகண் - அஞ்சாமை.
3. செம்மை-நேர்மை தவருதிருத்தல் :
5. சுடினும்-காய்ச்சினுலும் : ஆ-பசு.
8. கேண்மை-நட்பு
9. கற்கை-படித்தல்.

10. குலநலம்-குலத்தின் மேன்மை.

12. தயை-இரக்கம்.

13. நலிந்தோர்-வறியவர்; கேள்-நட்பு; கிளை-உறவு.

15. பேதை - மதியில்லாதவன்; பதரே-பயன் படாதவன்.

---

2. மூதுரை

பயன் கருதாமல் அறஞ் செய்க

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். 1.

நல்லவர்க்குச் செய்த உதவி

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்(கு) ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். 2.

மேன்மக்களின் இயல்பு

அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3.

காலம் அறிந்து நடத்தல்

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 4.

மானம் இழந்து வாழாமை

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ(து)அல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 5.

அறிவு, செல்வம், குணம்

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம். 6.

நல்லார் தொடர்பின் நலம்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று. 7.

தீயார் தொடர்பின் தீமை

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது. 8.

நல்லாரால் எல்லோர்க்கும் நலம்

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. 9.

துணை வலிமை

பண்டு முளைப்ப(து) அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா(து) அளவின்றி
ஏற்ற கருமம் செயல். 10.

உருவமும் குணமும்

மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா—கடல் பெரிது
மண்ணீரும் ஆகா(து) அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 11.

அறிவு அற்றவனின் இழிவு

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன் நல்மரம். 12.

போலி அறிவு

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித்(து) ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 13.

தீயோர்க்குச் செய்த உதவி

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக்(கு)ஆகாரம் ஆனாற்போல்—
பாங்கறியாப்
புல்லரி வாளர்க்குச் செய்த உபகாரங்
கல்லின்மேல் இட்ட கலம். 14.

மேன்மக்கள் எப்பொழுதும் மேன்மக்களே

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்(று)
அல்லாதார் கெட்டால் அங்(கு) என்னாகும்—சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும்
என்னாகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்.

—ஔவையார்

அருஞ்சொற் பொருள் :

1. தருங்கொல்-தருவாரோ ; தளரா-சோர்வடையாமல் , தாள்-அடியால்.
2. ஈரம் இலா-அன்பு இல்லா ; நேர்-ஒப்பாகும்.
3. அட்டாலும்-காய்ச்சினாலும் ; நட்டாலும்-நட்புச் செய்தாலும்.
4. கருமங்கள் - வினைகள், காரியங்கள் ; பழா - பழுக்கா.
5. பற்றலரை-பகைவரை ; இறுவது-முறிவது.
6. மேலை-முற்புறப்பில்.
7. இணங்கி-கூடி.

8. திருவற்ற-பயனற்ற.

9. பொசியுமாம்—கசிந்து நிற்கும்; உளரேல் - இருந்தால்.

10. பண்டு-முன்னமேயே ; ஆற்றல்-வல்லமை.

11. மகிழ் கந்தம்-மகிழம் பூவின் மணம்; சிறு ஊறல்-சிறிய ஊற்று நீர்.

12. கவை-கிளை ; காட்டகத்தே-காட்டினிடத்து சவை-கற்றோர் கூட்டம்.

13. பொல்லாச் சிறகு-அழகில்லாத சிறகு.

14. விடகாரி-விடவைத்தியர், நச்சு மருத்துவர்; பாங்கு அறியா-நன்றியறிவு இல்லாத; புல்லரிவாளர்-அற்ப அறிவீனர்; கலகம்-பாண்டம்.

15. சீரியர்-மேன் மக்கள்; என்னாகும்-அவரது குணம் யாதாகும்; உடைந்தக்கால்-உடைந்த பொழுது.